விலை சதம் 50

பக்கங்கள்—8

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ் றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோ ஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

★

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

துரித சலவைக்கு

மில்க்வைற் சலவைப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள் ஒரு பெரிய பைக்கற் ரூபா 3/75 பெட்டி 10 மேலுறைகளுக்கு பொலித்தீன் பாக்கை அல்லது 2 மேலுறைகளுக்கு அழகிய கலண்டர் ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
சவர்க்காரத் தொழிலகம்
யாழ்ப்பாணம்

மலர் 19 | மார்கழி 3 | முறை 6 | ஞாயிற்றுக்கிழமை | [18—12—77] | இதழ் 38

# எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று அவசியமில்லை!

## சக்தியை வீணாக்கக்கூடாது என இளைஞர் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அமைச்சர்களின் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வதோ, கறுப்புக் கொடி காட்டுவதோ, தமிழ்மக்கள் நொந்து கெட்டு இருக்கும் இன்றைய சூழ்நிலையில் அர்த்தமற்றதும் அவசியமற்றதுமான செயலாகும் என்று தமிழ் இளைஞர் பேரவை கூடித் தீர்மானித்துள்ளது.

விடுதலை கோரி நிற்கும் தமிழ் இளைஞர்களின் மாபெரும் சக்தியை வெளிப்படுத்துவதற்கு இது சரியான சந்தர்ப்பமல்லவென்றும் "காத்திருப்போம்; காலம் வரும் போது கடமையைச் சரிவரச் செய்வோம்; அதற்குத் தயாராக இருப்போம்" என்றும் தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புக்குழு நேற்றுக் கூடி நிறைவேற்றிய தீர்மானத்தில் தெரிவித்துள்ளது.

தமிழ் இளைஞர் பேரவையின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சுழு திரு சிவ. மகாராஜா தலைமையில் நேற்று மாலை கூடி மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

### உத்தியோகம் கோரி போகப்படாது

தமிழ் ஈழம்தான் எமது முடிந்த முடிபு என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு தமிழனும் இளைஞரும் உத்தியோகத்திற்கோ இடமாற்றத்திற்கோ தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை சிங்கள இலங்கா அரசிடம் அனுப்பி வைக்காமல் எமது புனித இலட்சியமான தமிழ் ஈழத்தை அமைக்கவும், அபிவிருத்தி செய்யவும் வேண்டுமே யொழிய இலட்சியத்தை மாசுபடுத்த வேண்டாமென்றும் தமிழ் இளைஞர்களையும் தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது

தமிழ் தேசிய இனத்தின சுதந்திரம் மறுக்கப்பட்டு அண்மைக்கால இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதில் காட்டப்படும் பாரபட்சம், தமிழ் தேசிய இனத்தின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் பொலிசாரால் தாக்கப்பட்டது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்காதது போன்று மேலும் மேலும் தமிழ்

(8ம் பக்கம் பார்க்க)

### அன்பான வரவேற்பு அமைச்சருக்கு கிடைக்கும்!

(யாழ்ப்பாணம்)

இன்று உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணம் வரவிருக்கும் வர்த்தக அமைச்சர் திரு அத்துலத்முதலிக்கு அன்பான வரவேற்பு காத்திருக்கின்றது.

அமைச்சரின் உத்தியோகபூர்வமான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்திருப்பது இளைஞர்களில் ஒரு பகுதியினர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியிருந்த போதிலும் அமைச்சரின் வருகைக்கு வடபகுதிமக்கள் மத்தியில் எதிர்ப்பு எதுவும் மூலைப்பாக ஏற்படவில்லையென்று அறிய முடிகின்றது.

முன்னைய அரசின் அமைச்சர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்தபொழுது சில சமயங்களில் ஏற்பட்ட பரபரப்பும், எதிர்ப்பு உணர்வும் பொதுமக்கள் மத்தில் இப்பொழுது காணப்படவில்லை.

#### அமைச்சரின் நிகழ்ச்சிகள்

அமைச்சர் திரு. அத்துலத்முதலி இன்று காலை 7-45 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் வந்திறங்குவார்

8-00 மணிக்கு பலாலி விமான நிலயத்திலிருந்து புறப்பட்டு யாழ்ப்பணம் இராணிமாளிகையை அடைவார்

காலை 9 30 மணிக்கு நாகவிகாரைக்குச் செல்வார்.

(8ம் பக்கம் பார்க்க

### காலி தேர்தல் ஆட்சேபமனு தள்ளுபடி

(காலி)

காலித்தொகுதிப் பிரதிநிதி திரு அல்பேட் டி சில்வாவின் தேர்தல் செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்குமாறு கோரி டாக்டர் டபிள்யு தகநாயகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்த காலி மேல் நீதிமன்ற நீதிபதி திரு பி ஈ டி. சில்வா ஆட்சேபமனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்

திரு அல்பேர்ட் டி. சில்வாவுக்கு செலவு தொகையாக 750 ரூபாயும் செலுத்தவேண்டுமென நீதிபதி உத்தரவிட்டார்.

இத்தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்போவதாக பின்னர் திரு. தகநாயக்கா தெரிவித்தார்.

### தேசிய அரசுப் பேரவையில் அனுரா விவகாரம் கிளப்பிய சர்ச்சை!

[கொழும்பு]

மூன்றாள் பிரதமரின் புதல்வரும் நுவரெலியா-மஸ்கெலியாத் தொகுதி 2-வது எம். பி யுமான திரு. அநுரா பண்டாரநாயக்கா பற்றி கொலன்னாவைத் தொகுதி உறுப்பினர் திரு வீரசிங்க மல்லிமாராச்சி நேற்று பேரவையில் பேசிய போது குறுக்கிட்ட சபாநாயகர் திரு. ஆனந்த தில்லை டி. அல்விஸ் திரு. வீரசிங்காவை பேலும் பேசுவதற்குத் தடை விதித்தார்.

முன்னாள் பிரதமரும் அவரது பிள்ளைகளும் ரோஸ்மட் பிளேஸ், நுவரெலியா, பலாங்கொடை, ஹொரகொல்லை ஆகிய இடங்களிலுள்ள தமது வீடுகள் பற்றிய விபரங்களை வீட்டு உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வெளியிடவில்லை என்று திரு. மல்லிமாராச்சி கூறியபோதே சபாநாயகர் குறுக்கிட்டார்.

திரு அநுரா பண்டாரநாயக்கா பற்றி கொலன்னாவ உறுப்பினர் பேசியபோது குறுக்கிட்ட சபாநாயகர் கூறியதாவது:-

திரு. அநுரா பண்டாரநாயக்கா இந்தச்சபையின் ஒரு கௌரவ உறுப்பினர். உறுப்பினர்கள் பற்றி நீங்கள் உங்கள் விருப்பப்படி பேசமுடி

(8ம் பக்கம் பார்க்க)

"தேன்கூடு" கதம்பநிகழ்ச்சி ஒத்திவைப்பு

காலநிலை சீராக இல்லாத காரணத்தால் இன்று ஞாயிறு மாலை யாழ் திறந்தவெளி அரங்கில் நடைபெறவிருந்த "தேன்கூடு" கதம்பநிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனம்,
யாழ். கிளை. 7956

வெங்காயம், மிளகாய் நல்ல காரம்!
அவற்றின் விளைச்சலோ அபாரம்!!
அவற்றை மேய வரும் பூச்சிகளோ சம்ஹாரம்!!!
இதுவே

அம்புஷ் 25

இருமிநாசினி தரும் உபகாரம்!!!!
ஒரு ஏக்கருக்கோ 2 அவுன்ஸ் அம்புஷ் 25 போதுமானதே

விலையோ ரூ. 35-00 மட்டுமே

மேலதிக விபரங்கட்கு:

விவசாய ஆலோசகர்:

த ரோறு லிமிட்டெட்,

32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7651

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் நடாத்தப்படும் மாபெரும்

யாழ்லயன்
உதைபந்தாட்டப் போட்டி

காலம்: 1978 தை 12, 13, 14, 15ம் தினங்களில்.

இடம்: யாழ்- விளையாட்டரங்கு.
[JAFFNA STADIUM]

கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளின் பிரபல உதைபந்தாட்டக் கழகங்கள் மோதுகின்றன.

ரிக்கற் விபரம்: நாளொன்றுக்கு:
பவிலியன் ரூபா 3 00.
நிலம்: ரூபா 1-00.
பாடசாலைச் சிறுவர் சதம் 50.

- இப் போட்டியில் அகில இலங்கை உதைபந்தாட்ட வீரர்கள் கலந்துகொள்கின்றார்கள்
- இப் போட்டியின் மூலம் வசூலிக்கப்படும் நிதி யாழ். லயன்ஸ் கழகத்தின் சமூகசேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

18-12-77 யாழ். லயன்ஸ் கழகம்

பாடசாலை நூலகங்கள்—(6)

# நூலகப் பொறுப்பாளரின் கடமைகள்

கவிஞர் வி. கந்தவனம்

பாடசாலையில் அறிவு சார்ந்த முயற்சிகளின் மையமாக நூலகம் விளங்குகின்றது. இவ் அறிவு சார்ந்த முயற்சிகளுக்கு இடமளித்து, அவற்றை வழிப்படுத்தி நூல் நிலையத்தின் முழுப்பயனையும் மாணவர்கள் பெறும் வகையில் உழைத்தல் நூலகப்பொறுப்பாளரின் கடமையாகும்.

நூலகப் பொறுப்பாளர் நூல்களில் மிகுந்த ஈடுபாடு உள்ளவராகவும் அதிபருடனும் ஆசிரியர்களுடனும் நல்லுறவை வளர்க்கக்கூடியவராகவும் மாணவர்களுக்கு இனியவராகவும் இருத்தல் வேண்டும்.

நூலகத்தை நூலகக்கலையியல் எடுத்துக்கூறும் முறைகளின்படி வைத்திருத்தல் அவரது தலையாய கடனாகும். நூலகம் பாடசாலையிலுள்ள பிற அறைகளிலும் பார்க்க அல்லது கூடங்களிலும் பார்க்கத் தனிவகையாவது. மாணவர்களைக் கவரக்கூடிய முறையில் மிக எடுப்பாக நூல் நிலையத்தை வைத்திருத்தல் நூலகப் பொறுப்பாளரின் பணிகளில் ஒன்றாகும். இதற்குவேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்வதற்கு அதிபர் மூலம் உரிய முயற்சிகளைப் பொறுப்பாளர் எடுத்தல் வேண்டும்.

சமீபகால நூல் வெளியீட்டு விபரங்கள், நூற்பட்டியல் போன்றவற்றைச் சேகரித்துத் தகுந்த நூல்கள் பற்றி தகவல்களை அறிந்திருப்பதோடல்லாது, அத்தகவல்களை அதிபர் ஆசிரியர்கள் ஆகியோருக்கும் தெரிவித்து அவற்றை நூலகத்துக்கு வழங்குதல் வேண்டும். நூல்களை வாங்கும் விடயத்தில ஆசிரியர்களுடைய ஆலோசனைகளையும் பெறுதல் வேண்டும். நூலகத்துக்கென்று ஒதுக்கப்படும் நிதியை முழுமையாகவும் பயன்தரும் முறையிலும் செலவிடக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் அதிபர் மூலம் எடுக்க முயலுதல் வேண்டும்.

நூலகப் பொறுப்பாளர் நூலகப் பாட நேரத்தை மாணவர்கள் செவ்வனே பயன்படுத்த உதவவேண்டும். கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் அதேவேளையில் நூலகத்துக்கு மிகுந்த விருப்புடன் மாணவர்கள் வரும் வகையில் நூலகப் பொறுப்பாளர் இனிமையாக நடந்துகொள்ளுதல் வேண்டும். நூலகத்தைப் பயன்படுத்தும் முறைகளைப் படிப்படியாக மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தலும் இவரது பொறுப்பாகும்.

பாடசாலை பாடப் படிப்பு முயற்சிகளுடன் நூலக முயற்சிகளை இணைத்தல்வேண்டும். நூலகப் பொறுப்பாளர் வகுப்பு வேலைகளை நூலகம் வரை விரிவாக்க உறுதுணையாக இருத்தல்வேண்டும். பாடப்புத்தகங்களை விளங்கிக் கொள்ள உதவும் துணை நூல்களை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். வகுப்புகளில் ஆசிரியர் மாணவர்களுக்குக் கொடுக்கும் வேலைகள், வீட்டு வேலைகள், என்பனவற்றுக்கு உதவும் வகையில் நூலகப் பாட நேரத்தைப் பயன்படுத்தல் விரும்பத்தக்கது. சுருங்கக்கூறின் நூலகப் பொறுப்பாளர் ஆசிரியர்களுடன் இணைந்து செயற்படல் வேண்டும். பாடசாலைக் கலைத்திட்ட முயற்சிகளுக்கு நூலகம் பயன்படுமாறு செய்தல்வேண்டும்.

இவை யாவற்றுக்கும் மாணவர்கள் நூல்களை வாசித்தல் அவசியமாகும். அவர்கள் நூல்களை விரும்புதல் வேண்டும்; படித்தல்வேண்டும், வாசிப்புப் பழக்கம் இயல்பானதொன்றாதல். நூலகப் பொறுப்பாளர் மாணவர்களை வாசிக்கத் தூண்டுதல்வேண்டும். இதற்குப் பின்வரும் முறைகளைக் கையாளலாம்:

[1] நூல்களை மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் வைத்திருத்தல்.

2. நூல்களின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடல்.

[3] ஒரு குறிப்பிட்ட நூலை ஏற்கனவே படித்து அதன் சுவையான பகுதிகள் சிலவற்றை மாணவருக்குச் சொல்லுதல்.

[4] ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு மாணவரை நூலகத் தலைவராக நியமித்தல். தலைவர்கள் மூலம் மாணவர்கள் விரும்பும் நூல்களை அறிதல் எல்லோருக்கும் பொறுப்புக் கொடுக்கும் வகையில் நூலகத் தலைவர்களை மாற்றுதல்.

[5] புத்தகக் காட்சிகளைப் பாடசாலையில் ஒழுங்குசெய்தல். நவராத்திரி விழாவையொட்டி கலைசம்பந்தமான நூல்கள், விளையாட்டுப் போட்டிக் காலத்தில் விளையாட்டுப் பற்றிய நூல்களைக் காட்சிக்கு வைக்கலாம்.

[6] பட்டிமன்றங்கள், விவாதங்கள், பொது அறிவுப் போட்டி போன்றவற்றை நடாத்துதல்.

இத்தகைய முறைகளினால் நூலகத்தின் முக்கியத்துவத்தையும் மாணவர்களுக்கு உணர்த்தி வாசிப்புப் பழக்கத்தை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துதல் நூலகப் பொறுப்பாளரின் தலையாய கடமையாகும்.

## 7 முடிவுரை

பாடசாலைக் கலைத்திட்டத்தில் நூலகம் முக்கியஇடத்தை வகித்தல் வேண்டும். சில மேல் நாடுகளில் நன்கு உணரப்பட்டுள்ள அளவுக்கு எமது நாட்டில் உணரப்படவில்லை. ஒரு சிலரால் இது உணரப்பட்ட போதிலும் வசதியீனங்களால் செயற்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது. எமது நாட்டில் பாடசாலைகளில் நூலகங்களில்லை. இருக்கின்ற பாடசாலைகளிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பாடசாலைகளில் மட்டுமே நூலகங்கள் உரியமுறை

[8ம் பக்கம் பார்க்க]


## கலைமாணிப்பட்டம் (Bachelor of Arts)

பயிற்றப்பட்ட தமிழ், ஆங்கில ஆசிரியர்கள் இலங்கைப் பல்கலைக்கழக [வெளிவாரி] பட்டப் படிப்பை யாழ். நகரில் சனி, ஞாயிறு தினங்களில் பயில 50 விண்ணப்பங்கள் 27-12-77 வரை ஏற்றுக்கொள்ளப்படும். External Studies Organization, 189, First Cross Street, Jaffna. 7949

## புள்ளி விபரவியல் (Statistics)

தூயகணிதம், பிரயோககணிதம் உட்பட மூன்று பாடங்களில் [A/L] பரீட்சையில் சித்தி அல்லது கணிதச்சிறப்பு பயிற்சி ஆசிரியர்கள் இலங்கைப் பல்கலைக்கழக (வெளிவாரி) பட்டப்படிப்பை யாழ். நகரில் பயிலலாம். முடிவு திகதி: 27-12-77. வெளிவாரி பட்டப்படிப்பு நிறுவனம். 189, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 7950


## நினைவாஞ்சலி

தோற்றம் 10 — 12 — 1926



மறைவு 30 — 12 — 1976

அமரர் திரு. சி. அப்புத்துரை

[யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, ஜெயலிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

எம்மை வாழவைத்த குலவிளக்கே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று ஓடிவிட்டது. நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் நம் உம்மை நினைத்து ஏங்குகிறும் ஆறவில்லை எம் நெஞ்சம். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனை பிரார்த்திக்கும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன், உற்றார் உறவினர்கள், செட்டித்தெரு, நல்லூர். 7931

## வரப்பெற்றோம்

'செவ்வந்தி' அக்டோபர் நவம்பர் இதழ் வரப்பெற்றோம்.

வழமையான அம்சங்களுடன், சிறுகதை கவிதைகளுடன் இதழ் மலர்ந்துள்ளது.


# வரி விளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கம் (வ. உ.)

## கேள்வி விளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் துணிகளுக்குப்போடும் சாய இரசாயன வகைகள் விற்பனைக்கு வைக்கப்பெற்றுள்ளது.

விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், சங்கானை ப நோ கூ சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் 28-12-77 நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்ப உறை மேல் மூலையில் 'கேள்விப்பத்திர விண்ணப்பம்' என்று எழுதவேண்டும். (சாய இரசாயன விபரங்கள் சங்கக் காரியாலயத்தில் பெறலாம்.

பொது முகாமையாளர். 7934

### விற்பனைக்கு

புதிய வெளிநாட்டு மணவறை கம்பளம் [கார்பட] விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 16, டேவிட் றோட், யாழ்ப்பாணம். 7939

எழுதுமட்டுவாளில் 13 ஏக்கர் தென்னந்தோட்டம் வீடு கட்டுவதற்கு வசதியாக. சந்தை, புகையிரத நிலையம், தபால்கந்தோர், பாடசாலைக்கு அண்மையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு இல. 22/1, விதானையார் வீதி, கண்டுக்குளி. 7937

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் 84-ம் இலக்க 4 பரப்புக் காணியும், வீடும் (குருநாதசுவாமி கோவிலுக்கு அருகாமையில்) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 82/7, இரண்டாம் ஒழுங்கை, வ. பொன்னுத்துரை J.P. பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் 7855

யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

பின்வரும் பொருட்கள்

## ஏல விற்பனை

மேற்படி சங்கத்தில் இப் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது.

முடிவு திகதி: 20-12-1977

விபரம்

1. 1 மெயின் சுவிச் 30 ஏ.எம். பி
2. 1 மீற்றர் இல.1372739- ஈ. ஆர்: 8921
3. 2 கோல்டர்
4. 3 சுவிச்
5. 1 பிளக்
6. 19 கோல்டர்
7. 1 ரியூப் மின்விளக்கு (பல்ப் இல்லை)
8. 5 பூட்டுக் கொழுக்கிகள்
9. 5 வால் பிளைச்சல்
10. 14 இரும்புத் தளுங்கு
11. 2 [கல்வனைஸ்ட்] தகரம் 8'X4'
12. 214 அடி சீலிங் பலகை
13. 20 அடி பி. வி. சி. வயர்
14. 1 விறுல்
15. 4 கல்வனைஸ்ட் தகரம் (8'X4'
16. 2 கல்வனைஸ்ட் தகரம் (4'X4')
17. 2 கல்வனைஸ்ட் தகரம் (3'X2')
18. 2 சப்புப் பலகை (12''X7')
19. 1 சப்புப் பலகை (12''X3')
20. 3 சப்புப் பலகை (12''X7')
21. 1 சப்புப் பலகை (7'X7')
22. 8 சப்புப்பலகை நீப்பை (2''X1''X3')
23. 1 பலகைக் கதவு பூட்டுப் பிணைச்சல்களுடன்
24. 33 சதுர அடி வலை (டைமன்ட்
25. 170 சதுர அடி 2''X1'' நீப்பை (Frame work)
26. 60 சப்பு நீப்பை
27. 2 இவச்சி
28. 3 ஆமைப்பூட்டு (Glory-Hong Kong)
29. 1 சோடா போத்தல் (பேபி பிரான்ட்)

மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கு.பெ.இராசரத்தினம்,
பொதுமுகாமையாளர்.
74/3, அல்பிரட் துரையப்பா வீதி.
யாழ்ப்பாணம்.
1977-12-16.
7942

### விற்பனைக்கு

மாங்குளத்தில் 30 ஏக்கர் நீர்ப்பாசன வசதியுள்ள காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: V. S. இராமலிங்கம், கண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 7946

புதிய இசைத்தட்டுகள் சிறந்த கிறிஸ்மஸ் றீஸ் கைச்சம் விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும்: பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ், 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7934

### தேவை

G. C. E (A/L) G A. Q., B. A., G S. Q, B Sc. வகுப்புகளுக்கு இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் தூயகணிதம், பிரயோகசணிதம், கணக்கியல், பொருளியல், டவியியல் கற்பிப்பதற்கு பட்டதாரிகள் தேவை 26-12-77க்கு முன் விண்ணப்பிக்கவும்: நிர்வாகஸ்தர், உயர்கலைக் கல்லூரி, யாழ்ப்பாணம். 7930

கணக்கு எழுதுவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. விபரங்களுக்கு நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். சலாம்ஸ், 95, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 7920

3. H P. மோட்டர் (2840. Revolution) தேவை. விலை விபரங்களுடன் தொடர்பு கொள்க. T ஆறுமுகம் பலவாசம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி 7914

பிரபல கண்ணாடித் தொழிற்சாலைக்கு ஊதுபவர் சம்பளம் 15-00, உதவியாளர் சம்பளம் 13-00, குமிழர் சம்பளம் 10-00 பெண் கப்பவைசர், கணக்காளர் (சம்பளம் குறிப்பிடப்படவில்லை) தேவை. விண்ணப்பிக்கவும். உலால் கிளாஸ், சுன்னாகம். 7904

மணமக்கள்தேவை, மணமக்கள் தேவையா? கடிதஉறையுடன் தொடர்க. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். 7927

வவுனியாவில் தோட்டவேலை செய்ய ஆட்கள் தேவை நல்ல அனுபவமும் ஊக்கமும் உள்ளவர்களுக்கு நாட்சம்பளம் ரூபாய் 10 முதல் 15 வரை வழங்கப்படும். குடும்பங்கள் விரும்பத்தக்கது. 192, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 7948

### WANTED

Doctor M B B S. R.M.P. wanted immediately. for private Dispensary & Surgery Interested please contact Dr (Mrs) arva Thevarajah, Chunnakam East, hunnakam. 7921

### கல்வி

ஹோமியோபதி டாக்டராகப் பதிவுபெற இம்மாத இறுதியில் வகுப்பு ஆரம்பமாகிறது. டாக்டர் தி பரமசிவம், 25/2 மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் 7951

### காணவில்லை

சென்ற 15-ம் திகதி யாழ்ப்பாணம் பிரதான வீதி பேருந்துச் கடையடியில் வைத்த 77 G 77 றைம் சைக்கிளை காணவில்லை. கண்டவர்கள் தந்தால் அல்லது அதுபற்றிய தகவல் கொடுத்தால் ரூபா 200/- சன்மானம் வழங்கப்படும். தகவலை தொலைபேசி இல 394 அல்லது 22, கண்டி வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். 7947

# சபலம்

**ஆம்!** அவன் ஆசிரியன் தான். எத்தனையோ பேர், இலங்கை அரசாங்கம் செய்த கோமாளித்தனத்தின் விளைவாக ஏற்பட்ட 'ஆசிரியனை?' என்ற பட்டத்தைச் சுமக்க முடியாமல் தினமும் போது இவனைப் போன்ற அறிவுமிக்கவன் சிறுமைப்படுவதில் அர்த்தமில்லாமலில்லை.

கல்வியில் எவ்வளவுக்கெவ்வளவு உயர்ந்து காணப்பட்டானே, அதே போல் கலையை யும் நோக்கினான். அவன் ஒரு கலைஞன் இளம் கலைஞன். தெய்வண்ண ஓவியங்கள் படைக்கும் இளைஞன்.

அழகு அவ்வளவில்லாவிட்டாலும் அவனது தோற்றம் அவனது மெல்லிய உடலுக்கு எவ்வளவோ கவர்ச்சியை அளித்தது. நீண்ட மூக்கும் வசீகரமான கூர்மையான கண்களும் அவனது கவர்ச்சியை மேலும் அதிகப்படுத்தின மெல்லிய மாநிறம் அவனது மேனிக்கு மெருகூட்டியது. இனிக்க இனிக்கப் பேசுவான் இலட்சியங்கள் பல புதைந்து கிடக்கும். அவன் பேச்சில் இலட்சிய நோக்கம் கொண்ட அவன் உள்ளம் விரிந்தே கிடந்தது; திறந்து காட்ட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தாமல் நாகரிகத்தில் ஊறித்திளைத்த நல்லதோர் நகரத்திலிருந்து இந்தப் பட்டிக்காட்டுக்கு வந்திருக்கிறான்.

முட்டும் எத்தனையோ மதிரை பலா, புளி போன்றவைகள் இருக்கவே இருக்கின்றன. அதில் ஏறி நின்று பார்த்தால் ஒருவேளை மன்னார்த்தீவே தெரிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

விநோதமான அமைப்பில் தான் அக்கிராமம் காட்சி அளித்தது. 300 ஜனங்களுக்குக் குறைவில்லாமற் கணப்பட்ட அக்கிராமத்தில் இரண்டோடு ஓட்டு வீடுகள் காணப்பட்டன. ஒன்று தபாற்கந்தோர் ஒன்று கி. ம. சங்கம் அதோ ஒரு மூலையில் கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறதே அது தான் ஆரம்பப்பாடசாலை. அதை அடுத்து ஒரு வீடுதி, அதில் தான ஆசிரியர்சள யாவரும் 'சிறைவாசம்' அனுபவிக்கின்றனர் அவனும் அதில் தான் ஒட்டிக்கொண்டான்.

அறிவுக்கும் அக்கிராம மக்களுக்கும் எவ்வளவு தூரம் என்று கணக்கிடுவது கடினம். ஆறும் வகுப்புக்கு மேல் யாரும் அங்கு கற்பதில்லை. அதைப் பற்றி அவர்கள் கொஞ்சம் கூடக் கவலைப்பட்டதுமில்லை. அவர்களது குறிக்கோளே இது தான் 'தான் உண்டு தன் வயல் உண்டு' வாழப்பிறந்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்...விடிந்தது.

பென்னம் பெரிய மரங்களினூடாக போர் புரிந்து வெளியேறிக்கொண்டிருந்த கதிரைக் கண்டதும் திடுக்கிட்டு விழித்த அவன் 'அடடா நேரமாகிவிட்டதே' என வருந்தினான். துள்ளி எழுந்தான். அக்கல்விக்கூடத்திலுள்ள மூன்று ஆசிரியர்களும் அன்று லீவு எடுத்து ஊர் சென்றிருந்தார்கள். அவர்களுக்கு கலாரசனையோ கற்பனை அறிவோ கொஞ்சங்கூடக் கிடையாது. அப்படியிருந்தால் குளிர்ந்த இளநீரை விட்டுவிட்டுக் கொதிக்கும் கோப்பியை நோக்கி ஓடுவார்களா?

பாடசாலைக்குள் நுழைந்த அவன் ஆவலுடன் விழிகளை அலட்டினான். விழிகள் படபடத்தன, வண்ணாத்திப் பூச்சி போல 'அடாடா அவளைக் காணேமே?' வியப்பும் வேதனையும் அவனை வருத்த வெறுப்புடன் வகுப்பை நோக்கினான் அவன் அது—ஆறும் வகுப்பு. பிள்ளைகளின் தொகையோ... வகுப்பின் இலக்கத்தைவிட இரண்டு குறைய இன்று அவளும் வராததால் அது மூன்றாகியிருந்தது. என்பது பிள்ளைகள் இடாப்பில் இருந்தும் வருவதென்னவோ ஐம்பதிற்கும் குறைவுதான். நாலு எழுத்து

## 'கல்வாதி கலீல்'

கும் வெயிலினால் ஏற்பட்ட வியர்வை நாற்றத்தைப் பசிந்துகொள்ளக் குளிர்ந்த நீர் கிடைத்தது போல் இருந்தது. அவனுக்கு மாடிகளையும் மைனர்களையும் அங்கு வாழும் மக்களின் உள்ளத்தைப்போல் கறுத்துக் கிடந்த தார் றோட்டுகளையும் கண்டு கண்டு கண்களையும் உள்ளத்தையும் வேகவைத்துக்கொண்டிருந்த அவனுக்கு களிமண்ணினால் உருவான கிற்றுக்கொட்டகைகளையும், பட்டி தொட்டிகளையும்; அங்கு பண்புடன் நடமாடும் பாட்டாளி மக்களையும் அவர்களின் உள்ளம் போல் வெளுறிக் கிடந்த வெள்ளை மணல் றோடுகளையும் கண்டதும் 'வைத்தியம்' சொர்க்கத்தைத் தேடி எங்கெல்லாம் அலைகிறார்கள். இங்கேயல்லவா அது இருக்கிறது' என்று கூறுவான்.

அழகு கொழிக்கும் சொர்க்க பூமியாகத்தான் காட்சியளித்தது அக்கிராமம். ஒரு பக்கம் பெரிய குளமொன்று தண்ணீரை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் நிறைந்து வழிந்தது அக்குளக்கட்டின் மேல் ஏறி நின்று பார்த்தாலே அக்கிராமம் முழுவதையும் நோட்டமிட்டு விடலாம். அப்படியும் தெரியவில்லை என்றால் வானத்தை

தெரிஞ்சாப்போதும் மாஸ்டர். வேறு என்னத்தை இவன்கள் வெட்டிக் கிழிக்கப் போறானுங்க' என்ற எரிச்சலூட்டும் பெற்றோர் நிறைந்த அக்கிராமத்தில் இவ்வளவு பிள்ளைகள் வருவதே அவன் முயற்சியால்தான்.

சகல வகுப்புகளையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு அவன் தலையில் விழுந்தது அவ்வளவு கஷ்டமான வேலையல்ல. அவனைப் பொறுத்தவரை இன்று அது வேம்பாகக் கசந்தது. காரணம்? அவள் வராததுதானே? கணக்கை ஒரு வகுப்பிற்கும் எழுத்தை ஒரு வகுப்பிறகுமாக மாறி மாறிக் கொடுத்துவிட்டு, ஓரளவு வசதியான கதிரை போடப்பட்டிருந்த ஆறும் வகுப்பிலேயே அடைக்கலமானான் அவன்.

காலை உணவு அருந்தாததினால் சிறிது சோர்வு ஏற்பட்டாலும் அவன் இல்லாததினால் அது மிகவும் விரிந்திருந்தது கைவிரல்களால் தனது நாடியை வருடிய அவன் முள்ளாகக் குத்திய மெல்லிய மயிர்கள் பல நாட்களாக 'ஸேவ்' எடுக்காத பரிதாபத்தை அவனுக்கு உணர்த்தியது.

'டேய்கமால் அவள் எங்கே? இன்று ஏன் வரவில்லை' கமாலை வினவினான் அவன்.

'அதுசேர்...அவ...அவ சடங்காயிட்டாளாம் ஸேர்' ஸ்தம்பித்துவிட்டான். அவன் என்ன விநோதம்? இவ்வளவு சிறு வயதிலும் சடங்காகுபவர்களும் உண்டா...என்ன வைத்தியக்காரத்தனம்? அவளின வயது என்ன வயதா...12 க்கு மேல இருக்குமே...பொங்கிப் பூரித்த அவள் அங்கங்கள் அவள் வயதை அதிகப்படுத்திக் காட்டியதே...இளம் கருமை கலந்த அவள் வண்ணத்தில் புதைந்து கிடந்த அழகு வெளுத்த நிறத்தில் வெறும் புன்னகை புரியும் பெண்களைக் கூட வெட்கத்திலாழ்த்துமே! வட்டமுகந்தான்; அதில் வண்டுகள் இரண்டு பறக்கத் துடித்துக் கொண்டிருக்குமே. அவளை நோக்கினால் அவ்வண்டுகள் சித்திரமாகி சிலையாகி நிற்குமே. அது ஒன்றே போதுமே! அவளின் கவர்ச்சிக்கு அத்திவாரமிட! உதட்டோ...ஓவியனான அவனுக்கே சந்தேகம்... அதன் வளைவு நெளிவுகளை வரைய முடியுமா என்று கருமை படர்ந்து, அசங்கிய உடையணிந்து அழகே அற்றுவாழும் அக்கிராமக் குழந்தைகளுக்கு இவள் ஒரு மறுபிறந்த கவுந்தன்... அதை ஊசியினால் தைத்து... துவைத்து... அவளின் அழகு, ஓவியனான அவன கண்களைக் குத்தியதில் வியப்பில்லாமல் இல்லை.

அவனது மேசையைச் சுற்றி நின்ற சிறுவர் கூட்டம்தான செய்த மகத்தான காரியங்களை காட்டி 'சபாஸ்' வாங்கத் துடித்து நின்றது. காதானை சிலேட்டை வாங்கிய அவன் வெண்கட்டியால் தர அடையாளமொன்றை அழுத்தமாக இட்டான் அதன் அர்த்தம்... மறுகணம் சிறுவர் குழாம் கலகலவென்று நகைக்காதா? முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டான்.

'சொல்வேன் கேட்டியா' 'ஓங் கணக்குப் பிழையென்று எப்பவோ தெரியுமே'' போன்ற மெல்லிய கீச்சுக் குரல்களின் நடுவே அந்த இனிமையான குரல் எங்கே? அவன் தேடிய குரல் எங்கே அவளின் அழகிய குரல்...வெற்றுப் பிரதேசத்தின் சூனியத்தைத் தான் கண்டான். அச்சிறுவர்களின் கலகலப்பினூடே 'கணக்காசட்டும், வாசிப்பாகட்டும் 'பளிச் பளிச்' சென்று அவள் கூறும் விடைகளும் ஆற்றின் வேகம் தெளிக்கும குரலும்...அப்பப்பா...அவன் கற்ற கல்வியின் பயனுக்குப் பாவமல்லவா அமைந்துவிட்டது. அதோடு அவளை அவள் வீட்டாரா? மூக்கு நீண்டு கண்கள் சிறுத்துக் காட்சியளித்த குழந்தை, கை நீண்டு வயிறு வீங்கிய பசு சூரியன் உதிக்கத் தாமரைத்தடாகம் நிறைந்து வழியும் 'அழகு' அப்படி எத்தனையோ கன்னி ஓவியங்களை அவள் படைத்து அவனிடம் காட்டி இறும்பூதுவான். '-ஸேர் பாருங்கோ ஸேர்... இந்த இடத்திலே நிழல் எப்படி விழும் சொல்லுங்கோ ஸேர்', ஆவலாய் வினவும அழகு. அதனூடே கண்களில் துடிக்கும் கலாவெறி. விரிந்த உதடுகளினூடே மின்னி மறையும் வெளித் தகடுகள்...

கிராமப்புறங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் என்ன சனியடா! நரகத்தில் போட்டு சித்திவதை செய்கிறார்களே. தமது 'நொலேஜ்' கூட 'இமட்ரூ' ஆகாமல் வற்றிப்போகிறதே என்று என்னதான் வருந்தினாலும் ஒன்றைமட்டும் மறந்து விடமாட்டார்கள். அதுதான் 'சிக்கன வாழ்க்கை'. ஒன்றோ இரண்டோ சேட்டும் வேட்டியும் இருந்தால்போதும். அத்தோடு உடைப்பிரச்னை சரி அங்குதான் 'சோஷலிஸம்' கொடிகட்டிப்பறக்கும். 'டேசபி இந்த சேட்டுக்குப் பில் தா' என்று உறுமியவாய்கள். சவர்க்கார நுரையில் உழலும் தன் கைகளைப்பார்த்து ''நாம்கூட நன்றாகத்தானே துவைக்கிறோம'' என்று பெருமிதமடையும் காட்சிகள் என்னத்தைப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன. சமத்துவத்தை ஐயா! சமத்துவத்தை!

இதெல்லாம் பெண்களுக்குத் தான் லாயக்கு. செரைக்கிறவன் செரைச்சாத்தான் தலை உருப்படும் என்று நளபாகத்தைப்பற்றி நாக்கு கிழியப் பேசும் ஆசிரியர்கள் கையில் அகப்பைகளுடனும் கண்களில் கண்ணீருடனும் (துக்கத்தாலல்ல சமைப்பதால்) போர் புரிந்து 'அறுசுவை' உணவுகள் தயாரிக்கும் பரிதாபமும் அநுபத்தியக் கறிபோல் ஆகிவிட்டாலும் 'அவனுக்கு நாமென்ன குறைச்சல்' என அசட்டு மகிழ்ச்சியடையும் அற்புதக் காட்சிகளையும் இங்குதான் காண முடியும் வேளாவேளைக்கு குளிப்பு வேண்டியவரை குடிப்பு விரும்பிய நேரம் தூக்கம் இவ்வளவு போதாதா? இன்பமான வாழ்க்கைக்கு என்று இறுமாப்புறும் சிலரும் இல்லாமல் இல்லை.

பையன்களின் சிரிப்பொலி கேட்டுச் சிந்தனையிலிருந்து விடுபட்டான் அவன். சதா சிந்தனை. ஓயாத சிந்தனை. சிந்தித்துச் சிந்தித்து என்னத்தைச் சாதித்துக் கிழிக்

(6-ம் பக்கம் பார்க்க

# இனக்கலவர விசாரணை அறிவித்தல்

1977-ம் ஆண்டு ஆகஸ்ட்—செப்டம்பர் காலத்து குழப்பங்களின் இயல்பையும் காரணங்களையும் விசாரித்து அறிக்கை செய்யவும் அவற்றால் உண்டான சேதங்களுக்கு நட்டஈடு சிபார்சு செய்யவும் இளைப்பாறிய நீதிபதி திரு. சன்சோனி தலைமையிலான விசாரணைக் குழுவை மாட்சிமை தங்கிய ஜனாதிபதி நியமித்திருப்பதால் தமிழ் பேசும் மக்களில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக தேவையானவையும் முக்கியமானவையென்றும் கருதப்படுகின்ற விபரங்களைத் திரட்டி ஆணைக்குழுவின் முன் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதால் கீழ்க்காணும் விபரங்களைப் பாதிக்கப்பட்டவர்கள் யாவரும் இன்றிலிருந்து பத்து நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புமவண்ணம் கேட்கப்படுகிறார்கள். முடியுமாயின் சமாதான நீதவான் முன்னிலையில் முடிக்கப்பட்ட சத்தியக் கடதாசியில் அனுப்புவது நன்று. சேதமடையாவிடினும் துன்புறுத்தப்பட்டவர்களும் தங்கள் அனுபவங்களை அறிவிக்கவும்.

கே. சி. நித்தியானந்தா.
செயலாளர்
இனக்கலவர விசாரணை விபரம்திரட்டும் குழு.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனை,
இல 676, காலி வீதி,
கொழும்பு-3,
-12-1977.

## ஆகஸ்ட் — செப்டம்பர் குழப்பங்களால் பாதிக்கப்பட்டோர்

## PERSONS AFFECTED BY AUGUST-SEPTEMBER DISTURBANCES

1. (அ) பாதிக்கப்பட்டவர் பெயரும் முகவரியும்;-
   (ஆ) வயது:- (இ) விவாகமானவரா:-
2. தொழில்:- தொழிலிடம்:-
   பாதிக்கப்பட்ட பொழுது வசித்த இடம்:-
3. ஆணைக்குழு விசாரணையின்போது தொடர்புகொள்ள வேண்டிய நிரந்தர முகவரி:-
4. உயிர், அங்கம், வீடு, பொருள் ஆகியனவற்றின் இழப்பு பற்றிய விபரம்:-
   (அ) கொல்லப்பட்டவர் பெயர்கள்:-
   (ஆ) காயப்பட்டவர் / துன்புறுத்தப்பட்டவர்கள் பெயர்கள்:-
   (இ) இழந்த வீடு, எரிக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட வீட்டு விபரங்கள்:-
   (ஈ) இழந்த வீட்டு/கடை உரிமை:-
   சொந்தம் / வாடகை / குத்தகை.
   (உ) இழந்த கடை விபரம்:-
   (ஊ) இழந்த பணம்:-
   (எ) இழந்த நகை:-
   (ஏ) ஏனைய பொருட்களின் விபரம்:-
5. தொழிலிடங்களில்/துன்புறுத்தப்பட்டவர்கள்:-
6. (அ) கொல்லப்பட்டவரில தங்கியிருந்தவருக்கு நட்டஈடு மதிப்பீடு ரூ...... ......
   (ஆ) காயப்பட்டவருக்கு நட்டஈடு மதிப்பீடு ரூ..........
   (இ) இழந்த அல்லது சேதப்பட்ட வீடு நட்ட ஈடு மதிப்பீடு ரூ............
   (ஈ) இழந்த அல்லது சேதப்பட்ட கடை நட்டஈடு மதிப்பீடு ரூ............
   (உ) இழந்த பணம் ரூ............
   (ஊ) இழந்த நகை மதிப்பீடு ரூ............
   (எ) இழந்த ஏனைய பொருட்களுக்கு நட்டஈடு மதிப்பீடு ரூ............
   மொத்தம் ரூ........................

(இயன்றவரையில் பெறுமான மதிப்பீடு பெறுதல் விரும்பத்தக்கது)

7. [அ] சம்பவம் நடந்த திகதி:-
   [ஆ] சம்பவம் எவ்வாறு நடந்தது:-
8. [அ] கொலை செய்தவர், உங்களைத் தாக்கியவர் அல்லது வீடு/கடை/பொருட்களை கொள்ளையடித்தவர்கள் /சேதப்படுத்தியவர்கள் யார்?
   [ஆ] அவர்கள் தொடர்பான விபரம் தருக;-
   [இ] சாட்சிகளின் பெயரும் விலாசமும்:-
9. [அ] எவ்வாறு மீட்கப்பட்டீர்— முகாம்/நாமே/பொலிஸ்படை/இராணுவம்/அயலார்/மற்றும்.
   [ஆ] மீட்கப்பட்ட திகதியும நேரமும்;-
10. ஆணைக்குழுவின் முன் சான்றளிக்கச் சம்மதமா?
11. வேறு தகவல்கள்:-

உறுதிப்படுத்துபவர் ஒப்பம்.

........................

திகதி:-

7928

குறுங்காவியம்

# அபலை நான் அடிமை!

'பன்னீரன்'

முந்தையர் நாட்டில் அன்று
முடிந்ததோர் நிகழ்ச்சி தன்னை,
சிந்தையில் கொண்டு-நானும்
சிறுகவி ஆக்கிப் பார்த்தேன்.
செந்தமிழ்த் தேனைக் கொஞ்சம்
பருகிட வாய்க்கு யாரும்,
சொந்தமாய்க் கவிதை செய்து
சுவைப்பதும் மரபுதானே!

காவிய மரபு யாதும்
கவினுறக் கற்றிலேன் யான்
மேவி லக்கண மெதுவும்
மெய்யுறத் செரிகிலேன். இப்
பாவினைத் தமிழர் யார்க்கும்
பணிவுடன் சமர்ப்பித்தேனே!



### அன்றொரு நாள்

இளமையும் ஏற்ற பண்பும்
இணைந்ததால் இரண்டுவுள்ளம்
களவுமயில் காதல் கொண்டு
களித்தனர், காலஞ் செல்ல;
வளமுறும் வாழ்வை நோக்கி
வழிகளை எண்ண லுற்றார்.

### மன்னவன் சேதி!

இன்னவர் காதல் வாழ்வு
இன்றுனம் இழையும் போது,
அந்நியர், போர்ப்படைகள்
அழிப்பதாய் தமிழர் நாட்டை
மன்னவன் சேதி யொன்று
மகிழ்வினைப் போக்கிற்றன்று!

மன்னவன் சேதிகேட்டு
மலைத்தனன் இல்லை 'சிங்கன்'
தன்னுயிர்க் காதல் பெண்ணின்
தலைமிசை முத்தமிட்டு,
இன்னுயிர் நாட்டைக் காக்க
எழுந்தனன் போரிற் செல்ல!

### காதலி வாழ்த்துதல்

போர்க்களம் போகவெண்ணும்
புரவலன் தன்னை நோக்கி
கார்குழல் மங்கை நல்லாள்
கனிவுடன் ஒன்று சொல்வாள்,
''சீர் தமிழ் நாடுவீழின்
சீரிய! திரும்ப வேண்டா;
கூர்முலை பெண்டிர் கூட்டம்
கோன்நிலை காத்தல் செய்வோம்!

சற்றும் நீர் வீரம் குன்றி
சளைத்ததாய் சேதி வந்தால்
அற்றிடும் காதல் வாழ்வு!
அழிந்திடும் மானம் யாவும்.
முற்றிலும் வெற்றி யாகில்
முளைத்தல் இன்ப மன்றோ!

என் தமிழ் நாட்டின் மானம்
இளைஞரே நுமது கையில்!
அன்ப, நான் வேண்டுமாகில்
அதனை முன் காத்தல் செய்வீர்,
இன்னிசைச் சுவைப்ப தெல்லாம்
இனிதுயிர் போன பின்பா?

கண்ணியம் கட்டுப்பாடு
கடமையும் கருத்தில்கொண்டு
திண்ணிய தோளின் வீரம்
திகழ்ந்திட வெற்றிகொண்டு
விண்ணிலே ஆடும் பூ போல்
விளங்கிட வருக'' வென்று
மண்ணினைத் தொட்டுமோந்து
மங்கையும் வாழ்த்தி நின்றாள்.

### காதலன் சூளுரை

''காதலும் களிப்பும் சொந்தக்
கதைகளும் வேண்டா நாட்டின்
சோதனை தொலையு மட்டும்
சோம்பிடேன், உறுதி'' என்று
நாதனும் சூள் உரைத்தான்
''நற்றமிழ் நாட்டுக்காக
வாது ஏன்? வாளே போதும்
வந்திடும் வெற்றி'' என்றான்

### போர் விளைவு

செந்தமிழ் நாட்டின் எல்லைச்
சேறெலாம் குருதி வெள்ளம்!
வெஞ்சமர் நடந்ததையோ,
வேதனை ஒலிகள் எங்கும்
பஞ்சமும் பசியும் மேவி
பலர் உயிர் துறக்கலுற்றார்!

### எதிரிகள் ஓட்டம்

நாட்டிலே புகுந்த மாற்றான்
நாணிடும் வண்ணம் ஆங்கு
காட்டெருமைகள் கூட்டம்
கண்டதோர் சிங்கம் அன்ன
வாட்டிறன் எதிரி சேனை
வழி தெறித் தோடுதம்மா!

### காதலி கவலை

திங்களோ பல கடந்தும்
சேதியோ காணவில்லை.
பொங்கிடும் அழகு மங்கை
பொறுமையும் இழக்லானள்
மங்கிடும் மாதுமேனி
மயங்கிடும் மனமும் ஒன்றும்!

### பொல்லாக் கனவு

கார்முகில் நாட்டில் மேவ
கனிகையும் கனவு கண்டாள்,
தார் அணித் தமிழர் மாட்சி
தரைமிசை வீழக் கண்டாள்
போர்க்களம் சென்ற சிங்கன்
புழுதியில் சாயக் கண்டாள்!

காதலன் போர்க்களத்தில்
புறமுதுகிட்டு ஓடி
வேதனையால் துயத்து
விழ்ந்ததாய் மனத்தில் எண்ணி
சோதனைக் காலம் என்று
சோகமே உருவாய் நின்றாள்!

### இனி என்ன வாழ்வு!

கனவுகள் பலித்தால் எந்தன்
காதலைப் பழிப்பார் மக்கள்
இன்த்தவர்க கிழிவு நேரின்
எளியவள் ஆவேனன்றோ
எனக்கினி வாழ்க்கை ஏனோ?
இறப்பதே மேன்மை என்றாள்,

### தூதுவன் வந்தான்

பேதையின் நிலையைக் கண்ட
பெற்றவர் மனத்தில் நொந்தார்
கோதுஇல் குணத்தின் மிக்கோர்
குமைந்திடும் வேளை, போரின்
சேதியை ஏந்தி அங்கோர்
தூதுவன் வந்து சேர்ந்தான்!

### தூதுவன் கூறியது

அமிழ்தினும் தமிழைப் பெற்றீர்
அறிவுடை மகளும் பெற்றீர்,
திகழ்ந்திடும் தீரம்கொண்ட
திருமகன் தானும் பெற்றீர்,
புகன்றிடப்போமோ 'சிங்கன்'
போர்த்திறன் கண்டீர்! என்றான்.

'தார் அணி வேந்தும் உங்கள்
தலைவனும் வெற்றியோடு
தேர்மிசை வீற்று நின்று
தெருவெலாம் பவனிகொண்டு
ஊரது நோக்கி வந்தார்
உண்மை நீர் உணர்கவென்றான்

### காதலி நாணம்

வெற்றியும் விருதும் கொண்டு
விளங்கிட வீரன் வந்தான்
நற்றவ நாட்டின் பெண்டிர்
நனிமலர் தூவி நின்றார்
மற்றவர் மகிழ்ந்து நோக்க
மாதவள் மறைந்து கொண்டாள்!

எங்கணும் இளமை பொங்க
இலங்கிடும் மாதர் கூட்டம்முள்
தங்கிடும் காதல் பெண்ணை
தலைவனும் தேடலுற்றான்
திங்களும் நாணம் மேவ
திரையிலே ஒளித்து நின்றாள்

மறைந்திடும் காதல் பெண்ணின்
மருங்கினில் சென்று வீரன்
'மறைவதேன் மானே' என்றான்
மகிழ்வுடன் மங்கை மெல்ல
மறைத்திடும் திரையை நீக்கி
மதனவன் காலில் வீழ்ந்தாள்!

### அபலை நான் அடிமை

செந்தமிழ் நாட்டை மீட்டீர்!
செந்தமிழ் மொழியைக் காத்தீர்!
அந்தமில் புகழைப் பெற்றீர்!
''அபலை நான் அடிமை'' யென்றாள்?

உள்ளமும் உணர்ச்சியாவும்
உவகையோடிணைந்து பொங்க
கள்ளரும் களிக்கும் காதல்
கருத்தினில் திளைக்க அந்த
கொள்ளருங் குணத்தினளைக்
குமரனும் தழுவிக்கொண்டான்.

கலாயோகியின் வாழ்க்கையும்
பணிகளும்—10

# வித்தகர் புகழுடம்பு எய்துதல்

கலாயோகி எழுபதாண்டுகள், மேலே எடுத்துக்காட்டிய படி நோய்வாய்ப்படாமல் வேலை செய்யமுடிந்ததென்றால் அந்தப் பெருமை அவருடைய வாழ்வின் பிற்பகுதியில் அவர் மனைவியாயிருந்த லூசா குமாரசுவாமியையே சாரும். அவர் ஒரு வாழ்க்கைத் துணைவிக்கு வேண்டிய நற்குணங்களெல்லாம் பெற்றிருந்தார். இது பற்றி கலாயோகி குடும்பத்துடன் நெருங்கிப் பழகிய மாக்ஸ் ஆர் குரொஸ்மன் (Max R Grossman) என்பவர் கூறுவது:-

"எனக்கு இது நன்கு விளங்குகிறது. லூசா குமாரசுவாமி ஓர் உத்தம பெண்மணி. உலகரங்கில் கலாயோகி ஒரு பிரசித்த தத்துவ ஞானியாக விளங்கப் போகின்றாரென்றால் -இது பற்றி எனக்கு ஐயமில்லை -அந்தப் பெருமையில பெரும் பங்கு அவருடைய மனைவியையே சாரும். அவரே இவர் வேலைசெய்வதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தார். திவசரி எழும் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'இவ்வாண்டு (1947) வசந்த காலம் ஆரம்பித்ததிலிருந்து இவர் உடல் நலம் குறைவுற்றது' இவர் களைப்புற்று, மிகவும் களைப்புற்றிருந்தார். வேலைசெய்ய ஆறுதலாகச் செய்யத்தெண்டித்தார். ஆனால் இவருக்கு நேரம் போதாமலிருந்தது. எவ்வளவோ வேலை செய்யவேண்டியிருப்பதை உணர்ந்தார். நான் எத்தனையோ வைத்தியர்களிடம் அழைத்துச்சென்றேன் எல்லோரும் அதிக உழைப்புத்தான் காரணமென்றனர். இது இவருக்கும் தெரியும் இவருக்கு வைத்தியர்களிடம் நம்பிக்கையில்லை பொதுவாக சுகதேகியாகவேயிருந்தார். ஆனால் மெழுகுதிரி அதற்குரிய காலம் வரையும் தான் எரியமுடியும். வேலை இவருக்குத் தவம். இதற்கு மேல் நாமொன்றும் கூறமுடியாது."

1947-ம் ஆண்டில் இவர் மறையுமுன் சில முக்கிய சம்பவங்களில் கலந்துகொள்ள முடிந்தது தெய்வ சங்கற்ப

ச. அம்பிகைபாகன்

மென்றே கூறவேண்டும். 1947 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியா சுதந்திரம் பெற்றதனால் இவர் வாழ்க்கையின் ஓர் இலட்சியம் கைகூடியது. இது சம்பந்தமாக ஹார்வாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் இவர் இந்திய தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இந்தக்கூட்டத்தில் பேசும் போதும் இந்தியா சுதந்திரம் பெற்றிருப்பது உலக நன்மைக்கு உழைப்பதற்கு ஒரு சாதனமாகக் கருதவேண்டுமெனக் கூறினார் உலகின் எதிர்காலம் இந்தியா தான் பெற்ற சுதந்திரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறதென் பதில்தங்கியிருக்கிறதாகவும் கூறினார்! இக்கூட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டிருந்தபடியால் இவர் மிகவும் களைப்புற்றுக் காணப்பட்டார்.

இவர் பங்குபற்றிய அடுத்த நிகழ்ச்சி இவரின் எழுபதாவது பிறந்ததினக்கொண்டாட்டமாகும். இவ்வைபவம் பொஸ்ரன் நகரிலுள்ள ஹார்வாட் கிளப்பில் கொண்டாடப்பட்

பிரச்னைகளை எல்லாம் தாமே ஏற்றுக்கொண்டார்.

தமது கணவர் விளம்பரத்தை விரும்பாதவரென்பதை நன்கறிந்திருந்தார். கல்விமான்கள் வரிசையில் தனக்கொரு இடத்தைத் தேடிக்கொள்ள விரும்பவில்லை என்பதையும் அறிந்திருந்தார். கணக்குக்கும் கலாயோகிக்கும் வெகுதூரமென்பதை அறிந்து, தாமே அவரின் வரவு-செலவுக்கணக்குகளுக்குப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். கணவன் செய்யும் ஆராய்ச்சிகளுக்கு உதவி செய்துவந்தபடியால் தாமும் ஓர் ஆராய்ச்சியாளரானார்.'

கலாயோகியின் விருப்பப்படி லூசா குமாரசுவாமி இந்தியா சென்று ஓராண்டு கச்சேரி குருகுலத்தில் சமஸ்கிருதம் கற்றார். சுருங்கச் சொல்லில் லூசா குமாரசுவாமி 'அவனே தானாய்'விட்டார்.

மனைவி எவ்வளவு கவனமாயிருந்தபோதிலும் கடைசி இரண்டொரு வருடங்கள் உடல் நலம் குறைந்திருந்தார். இவர் மறைந்த பின் திரு. துரைராசசிங்கத்துக்கு மனைவி

(5-ம் பக்கம் பார்க்க)

உங்கள் உற்பத்திப் பொருட்களை விற்கவேண்டுமோ?
உங்களுக்குத் தேவையான பாவனைப் பொருட்களை வாங்கவேண்டுமோ?
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
எஸ்.பி. சாமி அண் கொம்பனி
72, 4ம் குறுக்குத் தெரு— கொழும்பு-11
193, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

## குடிவெறி- கொண்டாட்டம்

# மனுஷ பெலவீனமும் தேவ பெலவீனமும்

கிறிஸ்மஸ் பண்டிகை கிட்ட வருகிறது. அதை யோசிக்கும் போது இன்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன் சிறிது காலம் வெளிவந்து மறைந்த 'விகட தாத்தா' என்ற ஒரு சஞ்சிகையில் யாரோ ஒருவரால் எழுதப்பட்டதும், நான் ஏழு வயதுச் சிறுவனாக இருந்த போது வாசித்ததுமான ஒரு பாட்டு நினைப்பு வருகிறது.

'சலாம் ஐயா! சலாம் ஐயா!
விகடதாதாவே!
தாழ்ந்து பணிந்து சலாம்
செய்கிறேன்
விகட தாதாவே!
கிறிசுமசில் 'தண்ணி' யடித்து
விகடதாதாவே!
கியாபகமும் தப்பிப்போச்சு
விகடதாதாவே!

['தண்ணி'யடித்தல்- சாராயம் குடித்தல்: கியாபகம்- 'தண்ணி' மிகுதியினுல் ஞாபகம் என்ற சொல கியாபகமாய் மருவிவிட்டது.]

கிறிஸ்மஸ் பண்டிகையில் கொண்டாட்டங்களுக்கும், 'தண்ணி'ப் பாட்டிகளுக்கும் குறைவில்லை. கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல மற்றவர்களும் குதூகலமாகக் கொண்டாடுவார்கள்.

'தண்ணி'யைத் தனியேயிருந்து போடுதல் ஆனந்தமில்லை. மற்றவர்களோடும் கூடிக் குடித்துக் கூத்தாடினுல் தான் ஆனந்தம்.

இந்த ஆனந்தத்தின் அருமையை அறிந்தவர்கள்தான் அறிவார்கள். இந்த ஆனந்தத்தை மற்றவர்கள் சொல்லி அறிய முடியாது மற்றவர்களுக்குச் சொல்லவும் முடியாது.

'மகட்குத் தாய் தன்
மணுன் ஒணுடாடிய
சுகத்தைச் சொல்லென்ருல்
சொல்லுவ தெங்ஙனே?'

முன் பிரபல பாராளுமன்ற உறுப்பினராயிருந்து, கடந்த பொதுத் தேர்தலில் மிகவும் மோசமான தோல்வியுற்ற ஒரு தமிழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவரும், அதே மாதிரித் தோல்வியுற்ற அதே கட்சியைச் சேர்ந்த ஒரு சிங்களப் பழைய பாராளுமன்ற உறுப்பினரும் தேர்தல் முடிந்து ஒரு கிழமைக்குப் பின்னர் கொழும்பில் ஒரு ஓட்டலில் சந்தித்துக்கொண்டாடினுர்களாம். தமிழ் அபேட்சகருக்குக் கடுமையாகத் 'தண்ணி' ஏறிவிட்டதாம். அவர் தனது கதிரையை விட்டெழுந்து சிங்கள நண்பனைக் கட்டிக்கொண்டு,

'கூடிக் குடித்தோமே மசுஞ!
கூட்டுறவாய்வாழ்ந்தோமே.
ஆடித் திரிந்தோமே மசுஞ!
அத்தனையு வீணுச்சே'

என்று ஒப்பாரி சொல்லி அழுதாராம்.

[மசுஞ என்றுல் சிங்களத்தில் மச்சான் என்பதாகும்.]

இப்படியான சம்பவங்கள் நடக்காமல் தடைபண்ண

### ஆனைக்கோட்டை 'திருவன்'

நினைத்த எங்கள் பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தனது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, 'நீங்கள் குடித்துக் கூத்தாட விருப்பமென்றுல் செய்யுங்கள். ஆனுல் மற்றவர்கள் காண அப்படிச் செய்யாதீர்கள்' என்று ஒரு தடை உத்தரவு போட்டுவிட்டார்.

இதைக் கேட்ட எனக்கு, எனது நண்பரொருவர் தான் பரமேஸ்வராக் கல்லூரியில் இன்றைக்கு ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு முன் விடுதிச்சாலையிலிருந்து படித்த காலத்தில் நடந்ததாகச் சொன்ன ஒரு சம்பவம் ஞாபகம் வந்தது.

பரமேஸ்வராக் கல்லூரிக்கு அப்போ எஜமான் சேர். பொன். இராமநாதன் அங்கிருந்த விடுதிச்சாலை அதிபர் கடுமையான மிடு மிடுக்குக்காரர் விடுதிச்சாலையிலிருந்த சிலமாணவரும், உபாத்தியாயர்களும் அவருக்கு எதிர்ப்பாக இருந்தார்கள்.

விடுதிச்சாலையில் 'சுப்பையா' என்று ஓர் ஏழைச்சமையற்காரன் இருந்தான். காலைப் போசனத்துக்கு 'சின்னம்மா' என்னும் பெயருடைய ஓர் அப்பக்கார மனுஷி அப்பம் கொடுப்பது வழக்கம். சுப்பையாவின் கடமைகளில் அந்த அப்பங்களை எண்ணிக் கணக்கெடுப்பதும் ஒன்று. ஒரு நாள் விடியற்காலை, சுப்பையா தனது கடமைகளைச் சரியாகச் செய்கின்றுனு என்று பார்க்க விடுதிச்சாலை அதிபர் பூனை மாதிரிச் சத்தமில்லாது சமையலறைக்குள் நுழைந்தார். அப்பமும் பெட்டியும் அப்படியே யிருக்க சுப்பையாவும் சின்னம்மாவும் சல்லாபத்திலிருக்கக் கண்டார்.

அதிபர், எஜமானுக்குத் தான் கண்டதை எழுத்து மூலமாகப் புகார் செய்தார் எஜமான் உடனே சுப்பையாவை அழைத்து முறைப்பாட்டை விளங்கப்படுத்தி, 'இதைப் பற்றி வருகிற சனிக்கிழமை 10 மணிக்கு விசாரிப்பேன்; நீர் உமது சாட்சிகளுடன் வர வேண்டும்' என்றுர்.

சுப்பையா நடுநடுங்கினுன் 'குற்றஞ்செய்தினும் குணமெனக் கொள்ளும் கொள்கை கண்டு' இறைவனின் 'குரை கழல்' சரண்புகுந்தான் அவனை ஆபத்சாயனும், அநாதை இரட்சகனும், ஏழைப்பங்காளனுமாகிய இறைவன் கைவிடவில்லை.

விடுதிச்சாலை அதிபருக்கு மாறுன சிலமாணவரும், உபாத்தியாயர்களும் சுப்பையாவுக்கு புத்தி சொல்லிக்கொடுத்தார்கள்:

'எஜமானுக்குப் பொய் சொன்னுல் தப்பமாட்டாய். உண்மையைச் சொல்லி நாங்கள் சொல்லுகிறபடி செய்' என்றூர்கள்.

சனிக்கிழமை வந்தது. எஜமான் வந்தார்; விடுதிச்சாலை அதிபரும் வந்தார்; ஏழை சுப்பையாவும் கைகட்டிக் கொண்டு வந்து நின்றுன்

எஜமான் குற்றசாட்டை விளங்கப்படுத்தினுர் "சென்ற வியாழக்கிழமை காலை ஐந்துமணிக்கு விடுதிச்சாலைச் சமையலறையில் சுப்பையாவாகிய நீர், அப்பக்காரச் சின்னம்மா என்னும் பெண்ணேடு தகாத முறையில் நடந்துகொண்டீர் என்று விடுதிச்சாலை அதிபர் புகார் செய்திருக்கின்றூர். அப்படிச் செய்தீரா?" என்றுர்.

சுப்பையா தேம்பித்தேம்பி அழுதுகொண்டு "ஆம் எஜமான். செய்ததுண்டு" என்றுன்.

எஜமான்: ஏன் அப்படிச் செய்தீர்.

சுப்பையா: [இன்னும் பெலத்து அழுதுகொண்டு விடுதிச்சாலை அதிபருக்கு எதிரானவர்கள் சொல்லிக்கொடுத்தபடி] "மனுஷ பெலவீனம் எஜமான்; மனுஷ பெலவீனம்" என்று இன்னும்கூட அழுதான்.

எஜமான் எத்தனையோ மனுஷர்களையும், எத்தனையோ பெலவீனங்களையும் கண்ட அனுபவசாலி; அறிவுக்கடல்.

ஐந்து நிமிடம் பேசாமல் இருந்து யோசித்தார். "மனுஷ பெலவீனம்!(புன்னகைபுரிந்து) ஏன் தேவ பலவீனம் என்று சொல்லாதேயுமேன்?" என்றுர்.

சுப்பையாவுக்குச் சரியான தண்டனை கிடைக்கப்போகிறதென்று, தேரைவை நாகம் பார்த்ததுபோல் விடுதிச்சாலை அதிபர் சுப்பையாவைப் பார்த்தார்.

எஜமான், "சரி சுப்பையா. நீ போ. இனிமேல் மற்றவர்கள் காண அப்படிச் செய்யாதே" என்று சொன்னுர்.

முற்றும் உணர்ந்த முத்தராகிய எஜமான் ஐந்து நிமிடமாக எதையோ யோசித்தார் என்று நினைத்தீர்களா? அவருடைய சிந்தனை தேவலோகத்திற்குப்போய் கொலுவில் இருந்த தெய்வேந்திரனுடைய ஆயிரம் கண்களிலிருந்தும் அருட்கடாட்சம் பெற்றுத் திரும்பிப் பரமேஸ்வராக் கல்லூரியை அடைந்தது.

முன்னெருகாலத்தில் தேவர்களுக்கு அரசனுகிய இந்திரன் கௌதம முனிவருடைய அழகிய மனைவியாகிய அகலிகையோடு தகாத முறையில் நடந்ததைத் தற்செயலாக வந்த முனிவர் கண்டுவிட்டார்.

உடனே முனிவர் கடுஞ்சீற்றங்கொண்டு இந்திரனையும் அகலிகையையும் சபித்தார்.

இந்திரனுக்கு அவரிட்ட சாபத்தை நான் இங்கு எழுதினுல் எங்கள் பத்திரிகாசிரியர் "அச்சிடக் கூடாதது" என்று தள்ளிவிடுவார். (விரும்பிய வாசகர்கள் கம்பராமாயணம் அகலிகைப் படலம் 554 ம் பாட்டை வாசித்து அறிந்து கொள்ளவும்) அதன் பின் முனிவர்.

"எல்லையினுண மெய்தி
யாவர்க்கு நகை
வந்தெய்தப்
புல்லிய பழியினேடும் புரந்
தரன் போயபின்றை
மெல்லிய லாளை நோக்கி
விலைமகளனைய நீயும்
கல்லிய லாதியென்றுன்
கருங்கலாய் மருங்கு
வீழ்வாள்"

பின் அகலிகை வேண்ட முனிவர் கோபந்தணிந்து "தசரத இராமனின் கால்கல உனக்குப்பட நீ பின்னும் பெண்

(7-ம் பக்கம் பார்க்க)

## வித்தகர்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டது. இதற்கு பொஸ்ரன் கேம்பிரிச் (அமெரிக்காவிலுள்ளது) முதலிய இடங்களிலுள்ள அறிஞர்கள் வந்திருந்தனர். இதில் பங்குபற்றிய ஜேம்ஸ் மார்ஷல் புளுமர் (James Marshall Plumer) என்பவர் எழுதியிருப்பது பின்வருமாறு: பிரதம விருந்தினருக்கு வலது பக்கத்திலிருந்த ஹார்வாட் பல்கலைக்கழக முன்னுள் பேராசிரியரும் இப்பொழுது பொஸ்ரன் கலைக்கூடத்தின் நிர்வாகிகளில் ஒருவரான ஜியோச் கரோல் எட்கெல் (George Horal Edgel) என்பவர் மூலம் அமெரிக்காவிலுள்ள எல்லாச் சர்வகலாசாலைகளும் கலைக்கூடங்களும் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தன. அவருக்கு இடப்பக்கத்திலிருந்த ஹார்வாட் காப்பாளரும், சிறந்த ஆசிரியருமான லாங்டன் வாணர் (Langdan Waner) மூலம் தூரகிழக்கு நாடுகளுடன் கலாச்சாரத் தொடர்பு வைத்திருந்த சகல அமெரிக்கரும் பேசினர். திடமான கொள்கையுடைய கிரகாம் கெரி (Graham Curey) என்பவர் அங்கு கூடியிருந்த சகலர் சார்பிலும் பேசினர் தந்திச் செய்திகள்மூலம் உலகின் பலபாகங்களிலுமுள்ள அன்பர்கள் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இதன் பின்னர் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. பாரத ஐயரால் தொகுக்கப்பட்ட 'கலையும் சிந்தனையும்'(Art and thought) என்னும் பாராட்டு விழா மலர் அச்சிட்டு முடியாதபடியால் அதன் படிவம் ஒன்று வழங்கப்பட்டது இம்மலருக்கு உலகின் பல பாகங்களிலுள்ள அறிஞர்கள் நாற்பதுக்குமேல் பட்ட கட்டுரைகளை வழங்கியுள்ளனர் இப் பெரியார்களெல்லாம் எனக்காக ஏன் இவ்வளவு சிரமம் எடுத்தனரெனப் பின்பு கலாயோகி கூறினுர். அவ் விருந்தில் கூடியிருந்தவர்கள் சார்பாக இரு சோடி வெள்ளிப் பீலிசுகளும் கோப்பைகளும் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணத்துப் பெரும்புலவர் நவநீதகிருஷ்ணபாரதியாரால் பாடப்பெற்று கலேசியா துரைராசசிங்கம் அவர்களால் மஞ்சள்பட்டில் அச்சடித்து அனுப்பப்பட்ட வாழ்த்துக்கவிதையும்வழங்கப்பட்டது"

(தொடரும்)

நீங்கள் மிளகாய் பயிர் செய்கிறீர்களா?

களை.பூச்சி, பங்கசுகளிலிருந்து உங்கள் பயிரைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

- விதைகளை யூனிஸோல் 1.5D தூளுடன் கலக்கவும்
- நாற்று மேடைக்கு "பிராஸிக்கோல் 20 D" பவுடரைத் தூவவும்
- "லஸ்ஸோ" பாவித்துக் களைகளை அழிக்கவும்
- "செவின்" பாவித்துத் தீங்கிழைப்பான்களை அழிக்கவும்

அபரிமிதமான விளைச்சலைப் பெற

'மக்லூட்ஸ்' தரும் வழி இதுவே.

உங்கள் தேவைகட்கு:-

எஸ்.பி. சாமி அன் கோ

மக்லூட்ஸ் 'விவசாய இரசாயண விநியோகஸ்தர்கள்

193, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்

### தமிழ்வளர்த்த கிறிஸ்தவர் (28)

# தீயவற்றை சாடிய பாவலர்

### வண. எம். ஏ. இரத்தினராஜா

பண்டிதர் ஜே. எஸ். ஆழ்வாப்பிள்ளை அவர்கள் சைவ சித்தாந்தத்தில் போதிய அறிவு பெற்றிருந்தார். அத்தோடு இஸ்லாம் மதத்திலும் அதிக அறிவு அவருக்கிருந்தது. அவர் ஆக்கிய 'இஸ்லாமிய நீதி நெறி', 'இஸ்லாமிய கதா மாலை' என்னும் இரு நூல்களும் மிகச் சிறப்புடையவை என முஸ்லிம் சமூக அறிஞரால் பாராட்டப்பட்டவையாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை வரலாற்றைப் புராணமாகப் பாடி 'நாயகபுராணம்' என்னும் சதகம், எழுத்து வருத்தனம், சுழிகுளம், திரிபங்கி, திரிபாகி, மாத்திரைச் சுருக்கம், கூட சதுக்கம், ஒற்றுப்பெயர்த்தல், மாத்திரை வருத்தனம் இவோடை போன்ற தனிச் சிறப்புறு பாடல்களை புலவர் அவர்கள் ஆக்கியுள்ளார்கள். இவர் ஆக்கிய நூல்களுள் அநேகம் இன்னமும் எழுத்துப் பிரதியாகவேயுள.

புலவரது பாவன்மையைப் பாராட்டிப் பாடிய வேறு புலவர் பலர். நவநீதகிருஷ்ண பாரதியார், வித்துவான் K T. ஞானப்பிரகாசர், ஆசிரியர் பெயரோடு வெளியிட முன் வந்தார். அந்நூல் இன்னமும் கையெழுத்துப் பிரதியாகவே இருப்பதாக அறிகிறோம்.

தமிழ் சமுதாயத்தைத் தொட்ட தீய சக்திகளைக் கண்டித்து இவர் பாடிய பாடல்கள் பலவாம். 'கலிகாலக்கோலம்,' 'உலகம் பலவிதம்' 'பூலோக வேடிக்கை' போன்ற சிறு நூல்களுக்கூடாக மக்களுக்கு வேண்டிய உய்புநிலை இவர் புகட்டினுர்.

பண்டைய தமிழப் புலவர்களிடம் காணப்பட்ட பாண்டித்தியம் அதிகம் இவரிடமும் காணப்பட்டது. மறைந்து போன தமிழ்க் கவி முறைகளான சித்திரகவி, அக்கரச் K. P. முத்தையா, கவிஞர் 'இராஜபாரதி' போன்ற அறிஞர் பலர் அவரைப் போற்றிப் பாடினர்.

புலவர் அவர்கள் தமது எழுபத்தேழாம் ஆண்டில், பிரிந்த போது, தமிழ்த்தாயே கலங்கி நின்றுள்.

'சமிசைகள் கொடுத்துப்
பாட்டு சட்டெனக்
கேட்டாலங்கே
அமிழ்தினுமினியவாக
அக்கால காளமேகன்
எமகண்ட முறையிற்போல
எளிதினிற் பாடவல்ல
நமதரும் புலவனுரை
நாடிழந்ததுவே ஐயோ.

[7ம் பக்கம் பார்க்க]

# ஈழத்து இப்போதைய கவிஞர் வரிசை-3

# ஏனிந்தப் பெருமூச்சு?

## இரசிகமணி கனக செந்திநாதன்

முன்னைய கம்பரே வாரும் வாரும் என்ற கட்டுரையிலே கவிஞர் கந்தவனத்தின் கற்பனைத் திறத்தைக் கண்டோம். கவிஞர்கள் எப்பொழுதும் கற்பனையில் மட்டும் காலத்தைப் போக்குபவரல்லர். வெறும் கற்பனைகளை மட்டும் பாடுபவர்களை இப்போதைய இரசிக உலகம் விரும்புவதில்லை. சமுதாயத்திலே புரையோடிக் கிடக்கும் கெட்ட அம்சங்களை எடுத்துக் காட்டிச் சிந்திக்க வைப்பதும் வாழ்க்கையின் அடித்தட்டிலே வாழும் தொழிலாளர்கள் பெருமூச்சுகளை மக்கள் மன்றத்திலே நிறுத்துவதும் உள்நாட்டு வெளிநாட்டு விடயங்களை ஊடுருவிப் பார்த்துச் சமாதானத்துக்காக உழைப்பதும் இக்காலக் கவிஞர்களது கடனாகின்றது.

இதற்கு மனித குலத்தின் மீது ஆழ்ந்த அன்பும் சமநோக்கும் தெய்வ நம்பிக்கையும் முற்போக்குச் சிந்தனையும் வைர நெஞ்சமும் அந்தக் கவிஞனுக்கு இருத்தல்வேண்டும் இக்கருத்துடன் பாரதியார் சுருக்கமாகக் குழந்தைகளுக்குச் சொல்லிய பாட்டுக் கவிஞனுக்கும்பொருந்தும் என்பது என்னுடைய எண்ணம். பாடல் இது:-

உயிர்களிடத்தில் அன்பு
வேண்டும்-தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு
வேண்டும்-இவை
வாழும் முறைமையடி
பாப்பா

சமுதாயப் பிரச்னைகளுக்குக் கவிஞர் கந்தவனம் முகம் கொடுத்துள்ளாரா? அல்லது கற்பனையுலகத்தில் மாத்திரம் ஆழ்ந்திருக்கின்றாரா? என்றால் இவரது இரண்டு நூல்கள் (ஏனிந்தப் பெருமூச்சு? உய்யும் வழி) இதற்கு விடை சொல்கின்றன.

ஆங்கிலேயர் இந்நாட்டுக்கு வந்து இந்நாட்டிலே சமுகமாக இருந்த பொருளாதார நிலையைத் தங்களுக்கு வசதியாகப் பெருந்தோட்டப் பொருளாதாரமாக மாற்றியமைத்தனர். 1840-ம் ஆண்டளவில் கோப்பிப் பயிரைச் செய்யத் தொடங்கி அதனால் பெருஞ் செல்வத்தைத் திரட்டினர். அது கால் நூற்றாண்டிற் சீரழிந்து விடவே பின்னர் இறப்பரையும் தேயிலையையும் அறிமுகப்படுத்தினர். பல ஏக்கர் நிலங்களை மிகக் குறைந்த விலையில் தம்வசப்படுத்தினர்கள். அவற்றில் வேலைசெய்வதற்காகத் தென்னிந்தியாவிலிருந்து பல தொழிலாளர்களை இங்கு கொண்டு வந்தனர், ஒப்பந்தக் கூலிகளாகக்கொண்டு வரப்பட்ட இந்தத் தொழிலாளர் இங்கே அனுபவித்த கஷ்டங்கள் சொல்லி முடியாது. மிக மோசமான லயன்களில் சுகாதாரமற்ற நிலையில் வாழ்ந்தார்கள் அவர்களுடைய இரத்தமும் வியர்வையும் இறந்த பின் உடலும் தேயிலைத் தோட்டங்களுக்கே உருவாகின. இந்நிலை இங்கு மாத்திரமல்லாது தென்னாபிரிக்கா, கயனா, பியூசி ஆகிய நாடுகளுக்குப் போன தொழிலாளர்களுக்கும் நடந்தது. பியூசிக் கரும்புத் தோட்டத்துத் தொழிலாளர்களது அவல நிலையைப் பாரதியார் 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடலிலே உருக்கமாகப் பாடியுள்ளார். ஈழத்துக் கவிஞர்களும் மலைநாட்டுத் தமிழரின் அவல நிலையைப் பல படியாகப் படம் பிடித்துள்ளனர்.

மாத்தளை நகரில் ஆறு வருடங்களாகப் படிப்பித்துக் கொண்டிருந்த கந்தவனம் அவர்கள் அம்மக்களுடனும் அம்மக்கள் தலைவர்களுடனும் நன்கு பழகியிருந்தார் அவரது உள்ளமும் இக்கொடுமைகளைக்கண்டு கொதித்தது அந்தக் கொதிப்பினாலே ஆவேசமான பல பாடல்கள் பிறந்தன;-

வீடுவாசல் காணிபூமி
விளங்கும் கல்வி இல்லை
பாடுபட்டு உழைத்து நாளும்
பயன்வழங்கு வோர்க்கு
நாடு கூட இல்லை பாரில்
நம்மைப் போல யாரும்
நடைப்பிணங் களாகப்
பெருமை

நாட்டும் உரிமையின்றிக்
கேடு கெட்ட வாழ்க்கை
தன்னில்
கிடந்தழுந்து வாரோ
கேலி கிண்டல் செய்வார்
மிக்கக்
கெட்டியாக வாழ்வோர்
வாடி மாளும் வாழ்க்கை
யோடு
வசைச் சொல் வம்பு வேறு
நாடி யான வழி வகுக்கும்
நல்லர் இல்லைக்
கொல்லோ?

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே' என்ற பாரதியின் பாடலைப் பாடிக்கொண்டே தமிழ்க்குலம் வாழ்கிறதேயல்லாமல் நாலு தமிழர்கள் ஒரிடத்தில் ஒற்றுமையாகக் காரியம்செய்வதைக் காணோம். நான்கு தமிழர்கள் நான்கு சங்கங்களையே உருவாக்கிவிடுகின்றார்கள். நான்குவிதக் கொள்கைகள் எழுப்புகின்றன. ஒருவரைப்பற்றி ஒருவர் ஏச்சுப் பேச்சு இந்த வேடிக்கை பனிதரை-எம்மவரின் ஐந்துபட்டு கீழ்த்தரமான நிலையைப் பல இடங்களிற் கவிஞர் சுட்டிக்காட்டுகின்றார். ஒரு பாடல் பின்வருமாறு:

அலைகின்றார் நம்மோர்கள்
ஆளுக்கோர் வழிசென்றே
அறிகில்லான் மதிகூட
அணுகிற்று இவர்பாடோ
உலைகின்றார் சாதியிலே
வேற்றுமைகள் உருவாக்கி
உயர்வில்லை தனமெல்லாம்
ஒன்றென்னும் உணர்
வில்லை

மலைகின்றார் மடிகின்றார்
பிரிவாலே பாதகர்கள்!
மதிப்பில்லை உலகத்தார்
மட்டப்பட்டம் தரலானார்
குலையின்றி இனமொன்றிக்
கூட்டாக இனமோங்க
குடையொன்றின் கீழ்
வாழ்க்கை
குடும்பம் போற்
கொள்ளாரோ!

கவிஞர் அவர்களின் தோட்டத் தொழிலாளர்படும் கஷ்டங்களைபற்றிய பாடலையும், சாதிவேற்றுமை பாராட்டி ஒற்றுமை குலைத்து நிற்கும் நிலையைக்கண்டு வேதனை கொள்ளும் பாடலையும் கண்டோம்.

இனி தமிழ்க் குலத்திலே பெண்களின் நிலைமையைப் பற்றிக் கவிஞர் என்ன சொல்லுகின்றார் என்று பார்ப்போம்.

பெண்ணைச் சக்தியின் அம்சமென விதந்து கூறியவர் திரு. வி. க. 'காதல் ஒருவனைக் கைப்பிடித்தே, அவன் காரியம் யாவினும் கைகொடுத்து மாதர்கள்' மாட்சியாக வாழவேண்டும், என்று உபதேசித்தவர் பாரதியார். 'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடவேண்டுமம்மா' என்று புகழ்ந்து பாடியவர் தேசிக விநாயகம்பிள்ளை யார் எப்படிப் பாடினாலும் எழுதினாலும் எங்கள் சமூகம் பெண்ணுக்குச் சரியான மதிப்புக் கொடுப்பதேயில்லை இது பகிரங்கமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அரசியலில், சமூகப் பணியில் வேறு பல தொண்டுகளில் எங்கள் மாதர்கள் இறங்கிவிட்டால் எத்தனை குசுகுசுக் கதைகள் எழும்புகின்றன. அவ்வளவுதூரம் போவானேன் ஏன்? பிறக்கும் குழந்தை பெண்ணாக இருந்தால் ஐயோ என்று அலறுவதும் ஆணாக இருந்தால் கூரை தட்டி மகிழ்வதும் நம்மவர் வழக்கமாகிவிட்டது. இதை மிக வன்மையாகக் கவிஞர் கண்டித்துப் பாடுகின்றார்:

பெண்ணா குழந்தைப்பிள்ளை
ஐயோ பெரும் பாவம்
மண்ணே இனி வாழ்க்கை
என்று வாழ்ந்து வரும்
இரண்டொன்றை கூட
ஏற்கும் வரம் பெற்றோர்
மிரண்டு விறைவிறைத்து
வில்லங்கப் பட்டோடி
ஐந்தாய்ப் பல பத்தாய்
ஆயிரமாய்ச் சேகரிக்கப்
பஞ்சாய்ப் பறக்கின்றார்
பட்டினியும் கிடக்கின்
றார்.

முன்பு கம்பரே வாரும் என்ற பாடல்களைப் படித்து இரசித்தீர்கள். இப்பொழுது சமூகக் குறைபாடுகளை அவர் தாக்கும் முறையையும் கண்டீர்கள். இனி அவர் 'நறை பழுத்த துறை தீந்தமிழ்' பற்றிச் சொல்லியதை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

---

## சிறுகதை

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

கப்போகிறுதே... அவனைத்தான் கேட்கவேண்டும் "ஸேர் என்னுடை கொப்பியைப்பாருங்க ஸேர்."

திடுக்கிட்டு விழித்த அவன் அக்கொப்பிக்குச் சரி, பிழையிட்டான். அவனது கரத்தில் இருந்த 'டிட்டோனி' வாட்சின் வெள்ளி முட்கள் ஒன்றையும் பத்தையும் நெருக்கிக் கொண்டிருந்தன.

'சரி, பிள்ளைகளே! வகுப்பிற்குப் போங்கள்' சில நிமிடங்களில் ஈசலின் இரைச்சல் வாசலில் ஒலிக்கத் துள்ளிச் செல்லும் பிள்ளைகளின் உல்லாசத்தைப் பார்த்தவாறு தனது விடுதியை அடைந்தான்

சிதறிக்கிடந்த ஓவியக்கூடங்களின் நடுவே வெறியூட்டும் காமவல்லிகளின் இடையழகும் நடையழகும் சாயாத கொம்பிரண்டு கொண்டு மேயாத நாணுகத் துள்ளித் திரியும் இன்பவல்லிகளின் தொடையழகும் சடையழகும் அவனது கண்களை மயக்கி வாழ்த்தின. கட்டழகு சொட்டும் கன்னியர்களைத் தீட்டித்தீட்டிக் கைகளும் சேர்ந்துவிட்டன அவனுக்கு. ஆனால் அவன் மனந்தான் நிறையவில்லை. காரணம் கல்யாண சாகரத்தில் இன்னும் அவன் மூழ்கவில்லை. ஆனால் காதல் போதையில் சிக்கித் திணறியிருக்கிறான். எத்தனையோ காமவல்லிகள் அவன் எண்ணத்தைச் சீண்ட வந்தனர். ஆனால் அவன் இதயத்தில் உறைந்து பனியானவள் எவளோ?

கைகள் வேகமாகப் புரண்டன உதடுகள் துடிக்க உள்ளம் விரிந்தது விழிப் புருவங்களை உயர்த்திப் புன்னகை புரிந்த உதடுகளுக்கு வெற்றி கிடைத்துவிட்டதோ? கைகளில் பற்றிய ஓவியம் ஒன்றுதான் அவன் கருத்தைக் கௌவியதோ? அழகு தேவதை அவளின் முகத்தை வண்ணங்களால் அப்பி அப்பி எடுத்தும் திருப்தி காணாமல் அவன் உதடுகள் 'ஜூம்' கொட்டின. அவன் இனிமேல் ஸ்கூலுக்கே வரமாட்டாளே. அப்படியனால் இந்த ஓவியத்தை எப்படிப் பூர்த்திசெய்வேன்.'' சிந்தனையோடே அவன் விரல்கள் இலேசாகக் கன்னத்தைத் தடவின, அவன் கன்னத்தையல்ல. அவள் கன்னத்தை அது காகிதம் என்ற உணர்ச்சியோ அவனுக்குச் சிறிதும் இல்லை. அழகிற்கு அடிமை அவன், அழகிற்காக உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராயிருந்தான். அழியும் அழகே! அழிவதற்கு முன் உனக்கு அப்படி ஒரு சக்தியா? பூர்த்தியாகாத அக்குறை ஓவியத்தை வைத்துக்கொண்டு சிந்தனையிலாழ்ந்தான் அவன். ஓவியமா அது? உணர்ச்சிப் போராட்டங்களின் விளைவாக வடித்த சதைக் கோளமல்லவா அது?

அவளை இனிப் பார்ப்பதே கடினம். வரைவது எப்படி... எப்படியோ வீதியிலோ வீட்டிலோ பார்த்துவிடலாம். அவளை அழைத்து, அவளை ரசித்து, அவளைத் தொடடுத்துவைத்து (தூரிகையை வண்ணத்தினுள்) வெள்ளை மங்கல் பேப்பரில் அப்பி அப்பி அருங்கலை படைக்கமுடியுமா?

நீண்ட பெருமூச்சுத்தான் தோன்றியது அவனிடமிருந்து. நாட்டுப்புறம் அது, அஞ்ஞானப் பேய் தலைவிரித்தாடிய நாட்டுப்புறம் அது பத்தாம் பசலிக் கொள்கைகள் பாதையெங்கும் பனிபோல் உறைந்து கிடந்தன.

நாட்கள் நத்தைவேகத்திலா நகரவேண்டும். கச்சைக்கட்டுடனும், கழும்பேறிய சட்டைகளுடனும் (சிலவேளை சட்டை இல்லாமலுங்கூட) நாட்கணக்காக வெட்டாத தலைமயிர் காற்றில் நடனமாட பாடசாலைக்கு வரும் பள்ளிச் சிறுவர்களை ஏக்கத்துடன் பார்த்த அவன் தன்னையும் நோட்டமிட்டுக்கொண்டான்.

கூழைக் குடித்துவிட்டுக் கொப்பி வாங்கக் காசில்லாமல் எப்படியெல்லாமோ பல்லிளித்துக் காசுவாங்கி, கடைவீதிவழியே கிழிந்த கோலத்துடன கேவலரீதியில் திரிந்தவர்களெல்லாம் 'தகா'வின் புண்ணியத்தால் கிடைத்த ரூபா 64 ஸ்கேலிலே களட்டாத களிசானுக்குள்ளே இறுக்கிய டெர்லின், டெட்ரோனுடன் மன்னரைப் 'பாரிஸ்' என்று நினைத்துக்கொண்டு அரைகுறை 'இங்கிலீஸை' ஒருபக்கம் வெளுத்துவாங்கி மறுபுறம் 'மெட்டஹோன்' சிகரட்டின் புகையினூடு பதில் கூறும் சில வாத்தியார்கள் தலையைக் கண்டாலே 'கலக்' கதைக்கும் எண்ணம் (ரகசியமாய்த்தான்) அமைந்த தன் எளிய தோற்றத்தை எண்ணிப் பார்த்துக்கொண்டான்.

அவனை நோக்கித் துள்ளி ஓடி வந்தான் ஜமீல். அவளின் தம்பிதான். அவன் ''ஸேர் எங்க வந்சா சொன்னு உங்களை எங்க வூட்டுக்கு வரட்டாம்.''

வியப்பு! திறந்த வாய்மூடவே இல்லை ஏழு நாளில் என்ன மாற்றம். சிறுமியா அவள். சிறுக்கி சித்தத்தைப் பிழிந்தல்லவா விட்டாள். அவனால் தேங்காய்ப் பால் பிழிவது போல பழைய மரத்தூணை இறுகப்பற்றியவாறு தோளுக்கும் தூணுக்கும் நடுவே முகத்தைப் புதைத்தவாறு நாணத்தை அள்ளிவீசிய அவளை நோக்கியஅவன் உள்ளம் துடித்தது.

'ஐயையோ! முகம் கசங்கி விடப்போகிறது நிமிரம்மா'' கூறியது வாயல்ல, உள்ளம், துணிவுடன் நிமிர்ந்துபார்த்தாள் அவனை. 'உம்மா எங்கே?' என்று வினவிய அவனுக்கு 'இங்கேதான் மாஸ்டர் தண்ணி அள்ளப்போனேன், இன்னும ஒரு குடம்தான் கொஞ்சம் இருந்திக்கிங்க' என்று பதில் கூறி வெளியேறினாள் அவளின் தாய்.

தூணைப்பற்றியிருந்தகைகளை எடுத்தவாறு திரும்பினாள் அவள், அடுக்களையை நோக்கி அவள் அசைந்தாள். கைகளில் மோர்க்குவளையுடன் வந்த அவளின் காந்தக் கண்களுக்கு முன் வெட்கிய அவன் கண்கள் சற்றே கீழ்நோக்கின.

'குடிங்கோ ஸேர்' நீட்டிய மோர்க்குவளையின் மேல் ஒட்டியிருந்த அவள் கரத்தில் அவன் கை சற்றேபட்டது. அவளின் உடலெல்லாம் புல்லரிப்பு. மயிர்க்கால்கள் நுவரெலியாக் குளிரில் குத்திட்டு நின்றன. ஆனால் அவனுக்கோ...

'இனி ஸ்கூலுக்கு வர மாட்டேதானே'-அவன் ஏக்கத்துடன் கேட்டான் அவளின் கண்களில் தேங்கி நின்ற கண்ணீரே பதில் கூறியது. 'ஆனு நீங்க அடிக்கடி இங்கே வாங்கோ ஸேர்' ஆசையாகக் கேட்டாள் அவள். 'நீதான அங்கு வரனும்; பாதியிலே நிற்கிற படத்தை முடிச்சிடனும்' என்ன...வரீயா?' சந்தேகத்துடன் தான் கேட்டான் அவன். அவளோ, 'எனக்கும் ஆசைதான் ஸேர். ஒங்களைப் பார்க்கணும்னு ஏழு நாளா ஏங்கிப்போனே ஸேர் உம்மாட்டைக் கேட்டுட்டு எப்படினாலும் வர்றேன ஸேர்' என்று உற்சாகத்துடன் கூறினாள். வெளியேறிய அவனை ஏன் அப்படி விழுங்கிவிடுவது போல் வெறித்து நோக்கினாள் அவள். அவன் இதயத்தில் ஏதோ ஒன்று குறுகுறுத்தது. அன்று சனிக்கிழமை

விடுதியில் அவனைத் தவிர எவருமே இல்லை. என்ன ஜாலமோ பண்ணிவிட்டு அவனிடம் அவள் வந்துவிட்டாள். உள்ளத்திற் தோன்றிய கலா வெறியையெல்லாம் ஒன்று திரட்டித் தூரிகையை எடுத்தான் அவன். அதில் வண்ணங்கள் கசிந்தன அவளைத் தொட்டுக் கதிரையில் அமர்த்தினான். துவளப் போகிறாள் அவள். 'என்ன இது?' 'செல்லமாகக் கடிந்து விட்டுக் கதிரையில் அமர்த்தினான். அவளை இரண்டு கைகளாலும் கன்னத்தைத் திருப்பிக் கவர்ச்சியூட்டும் போஸ் கொடுக்க முயன்றான் ஆனால் இதென்ன, மீண்டும் மீண்டும் அவள் தொய்ந்து துவண்டுதான் இருந்தாள். அவள் கண்கள் மட்டும் எதையோ ஒன்றை அவன் மேல் கக்கிக்கொண்டிருந்தன. 'ஸ்' என்று அவளைப் பேர் சொல்லி அழைத்தவாறு இங்கே பார் நான் வைச்ச மாதிரியே இருக்கணும்; இல்லாட்டி எப்படி வரையமுடியும்' என்று கூறியவாறு தூரிகையை எடுத்து...சிவப்பு வர்ணத்தை அதில்துவைத்து... 'ஸேர்'

திடுக்கிட்டுத் திரும்பினான் அவன். அவள் எழுந்து நின்று சோம்பல் முறித்தாள். உடலின் அலைகள் மேலும் கீழும் அசைந்து அசைந்துசெல்வதுபோல் அவள் உடலெல்லாம் மேடு பள்ளங்கள் அசைந்து அசைந்து...சிறுமியா அவள், அப்படி நினைப்பவன் நிச்சயம் பைத்தியக்காரனாகத்தான் இருக்கவேண்டும்.

'உன் உதட்டைக்கீற நான் துடிக்கிறேன் நீ என்னடாவென்றால்...' கலா வெறி கண்ணை மறைக்க அவளை பலவந்தமாக அமர்த்தி கன்னத்தைத் திருப்பி 'போஸ்' எடுத்தான் அவன். அந்தச் சொற்ப நேரத்திற்குள் அவளோ? நாணம் பிய்த்துத் தின்க, உடல் ஜில்லிட்டுப் புல்லரிக்க, உணர்ச்சிகள் துடிக்க, துவண்டாள்.

கடதாசியில் கீறியிருந்த அவளின் உதட்டின் மேல் தூரிகையை வைத்து வர்ணத்தை அழுத்தி மகிழ்ந்தவாறு நின்ற அவனது தோளின் மேல் கொதிக்கும் மூச்சுக் காற்றுப் பட்டதும் நடுக்கிட்டுத்

(7-ம் பக்கம் பார்க்க)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
காத்திருப்பேன் உனக்காக

நாகபஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி.ப 2-30
எம். ஜி ஆர் - லதா
உழைக்கும் கரங்கள்

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2.30, 6 00, 9.30.
எம். ஜி. ஆர் - விஜயா, நாகேஷ் நடித்த
விவசாயி
(புதிய பிரதி)

இன்று மட்டும்
சாந்தி (யாழ். நகர்) போன்: 7648.
10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி — வைஜயந்திமாலா
தேன் நிலவு [புதிய பிரதி]

Regal (Jaffna)
"KRAKATOA" IS A STUNNER!
A Grand Adventure spectacle designed to knock you out.
It is Sensational. An artistic and technical triumph.
Adults may find themselves biting their nails.
Now running to packed houses in its
3nd Week 70 M. M.
"Krakatoa East of Java"
Cinerama wide screen! [Techni color]
Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
Sat, Sundays 10-30, A.M. 1-30 4-15 7 00 & 9-30P.m.

11-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, விஜயகுமாரி, கே. ஆர். விஜயா நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.
தந்தை செல்வாவின் இறுதியாத்திரை வெகு விரைவில் இப்படத்துடன் காண்பிக்கப்படும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி -லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
கே. பாலசந்தர்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
முத்தான முத்தல்லவோ

விக்டோரி எம். ஜி. ஆர். லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

RIO (Jaffna)
Daily 4 Shows
MARCOPOLA
THE MAGNIFICENT
(Color-Scope)


## தீயவற்றை ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

'எழுதிக்கொண் டிருக்கும
பேனை எடுக்காமலெழுந்
திடாமற்
பழுதெனக் கூறிக் கிறிப்
பக்கத்து நுழைந்திடாமல்
மன மளப்பாகத் தீட்டும்
வல்லபாவலனை யெண்ணி
அழுகிடாதென்னை
செய்வோம் ஆரிதைச்
சகிக்கலாமே.'

தமிழ் வளர்த்த கிறிஸ்தவ தொண்டனப்ப புலவரவர்கள் ஆற்றிய அருந்தொண்டை வருங்கால சந்ததி அறிந்து போற்றி நிற்கும்.

இதுவரை குறிப்பிடப்படாத வேறு பல கிறிஸ்தவ தமிழ்த் தொண்டர்களும் நம்மத்தியில் வாழ்ந்திருக்கின்றனர்; இன்னமும் வாழ்கின்றனர். தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஜே திமுத்து என்பவர் சிறந்த ஆங்கில அறிவும் தமிழ் ஆராய்ச்சியும் பெற்றவர். அநேக தமிழ இலக்கியங்களை இவர் ஆங்கிலத்தில் அழகுற மொழி பெயர்த்துள்ளார். புறநாட்டார் ஆங்கிலம் மூலம் தமிழ் கற்பதற்கு ஏற்ற ஒரு சிறந்த நூலையும் இவா ஆக்கியுள்ளார். வித்துவான் வி. பி. க நடராஜா, வி. பி. க சுந்தரம் என்னும் அறிஞர் சிறந்த கீர்த்தனைகளையும், தேவாரங்களையும் பாடியுள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த ஆசிரியர் திரு. வி. கி. இராஜதுரை என்பவர் ஒரு சிறந்த கவிஞராவார். கவி அரங்குகள் பலவற்றிற் பங்குபற்றித் தமது திறனை இன்னமும் காட்டிவருபவர். வித்துவான் F.X C. நடராஜா, வித்துவான் ஜேயரத்தினம் எனபோர் ஆழ்ந்த தமிழறிவும் ஆராய்ச்சியும் பெற்றவர்கள்.

சுவாமி ஞானப்பிரகாசரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, கிறிஸ்தவ மதத்துக்கும் தமிழுக்கும் மாபெரும் தொண்டு செய்துவரும் சுவாமி தனிநாயகம் அடிகளாரது சேவை நாம்யாவரும்நன்கு அறிந்ததே. அவரது அயரா உழைப்பினலும், தன்னலமற்ற தனிப பெரும் சேவையாலுமே இன்று மறுபடியும் தமிழ் மொழியின தொன்மையும், பண்பும், அழகும், தூய்மையும் பெருமையும் நிறைவும் உலகெங்கும் எடுத்துஓதப்பட்டுவருகின்றது. புற நாட்டவரும் புற இனத்தவரும் தமிழ்மொழியைப் போற்றும் வண்ணம் உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகள் மூலம் அளப்பரும் சேவை தனிநாயக அடிகளால் ஆக்கப் பட்டுவருகின்றது அடிகளாரின் அரும் பெருந்தொண்டை நாம் மனமார வாழ்த்துகின்றோம். அவர் ஆக்கம் பெருகட்டும்; அவர் சேவை ஓங்கட்டும்; தமிழ்த் தாயின் இதயமே பூரிக்கட்டும். அவள் பெற்ற பிள்ளைகளுள் கிறிஸ்தவர் ஆற்றியதும் ஆற்றுவதுமான அருந் தொண்டே அவளைப் பேணிப் போற்றி என்றென்றும் வாழ வைக்கட்டும்.

வாழ்க தமிழ்!

வாழ்க தமிழ்த் தொண்டர்!

(முற்றும்)

## மனுஷ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

னுநவாவாய். அதுவரை கல்லாய்க் கிடப்பாய்" என்று சாபவிமோசனம் கொடுத்தார்

அதன் பின் தேவர்களெல்லாம ஒருங்குகூடிப் பிரமனைத் தலைவனாகக்கொண்டு ஒரு குழுவாக முனிவருடைய ஆச்சிரமத்திற்குப் படையெடுத்துச் சென்றனர்.

''அந்தவிந்திரனைக் கண்ட
வமரர்கள் பிரமன்முன்னு
வந்து கோதமனை வேண்ட
மற்றவை தவிர்த்து
மாமுச்
சிந்தையின் முனிவு தீர்ந்து
சிறந்தவராயிரம்
கண்ணுக்கத்
தந்தமதுலக புக்கார்
தையலும் கிடந்தாள்
கல்லாய்'?

இந்திரனுக்கு இப்போ ஆயிரம் கண்கள் இருக்கின்றன மற்றவர்களுடைய குற்றங்களை விசாரித்துத் தண்டனை வழங்கும் நீதிபதிகள், பள்ளிக்கூட அதிபர்கள், பெரிய உத்தியோகத்தர்கள் முதலியோர் முதலில் தங்கள்தங்கள் பெலவீனங்களையும், சமையற்காரச் சுப்பையாவின் மனுஷ பெலவீனத்தையும். தெய்வேந்திர மகாராசனின் தேவ பெலவீனத்தையும் மனதில்வைத்து நடந்துகொள்வார்களாக.

[சுப்பையா, சின்னம்மா என்பவைகள் கற்பனைப் பெயர்கள்]

## பெண்ணுடன் இருந்தவர் வெட்டப்பட்டு மரணம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் திட்டியைச் சேர்ந்த 38 வயதான அன்ரனிராசு என்பவர் பலத்த வெட்டுக் காயங்களுக்குப் பலியானார்.

யாழ் பதில் நீதிபதி திரு. ஏ. அமிர்தலிங்கம் இம்மரணம் தொடர்பாக விசாரணை நடத்தினார்.

இறந்தவரும் அவரது ஆசை நாயகி எனக் கூறப்படும் இராசம்மாவும், மகனும் ஓலையால் வேய்ந்த கொட்டிலில் இரவு படுத்திருந்த போது கொட்டில் தீப்பிடித்து எரியவே அவர்கள் வெளியே வந்ததாகவும், அப்போது மூன்று பேர்காத்துநின்று தாக்கியதாகவும் விசாரணையில் கூறப்பட்டது,

இறந்தவரைக் கட்டிப்பிடித்து, தலையிலும் தோளிலும் வெட்டியதுடன 13 தடவை குத்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

சந்தேக நபர்களான சின்னவன் தம்பியார், அந்தோனிப்பிள்ளை, சந்தயா காணிக்கை, செல்வம் ஆசைராசா ஆகியோர் தலைமறைவாகியுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை 19ந் தேதிக்குப் பின் போடப்பட்டது [க-அ]

## சிறுகதை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பினன். மறுகணம்- அவன் முகம் அவள் கன்னத்தில் மோத அவள் இதழ் அவன் கழுத்தில் பதிய "ஸாரி" என்று உளறியவாறு விலகினன் அவன். காதல் போதை தலைக்கேற நின்ற அவளை நோக்கி 'ஏன் எழுந்தாய் ...அதில் போய் இரு .. இல்லா விட்டால் ...' எனக்கடிந்தான் அவன். அவனுக்குத் தெரியுமா, அவளின் காதல் வெறி கற்பிக்கும் காலத்திலேயே அவன் மேல் சபலம் கொண்ட அச்சிறுமி, இன்று பொங்கிப் பூரித்து புதுப்பெண்ணாக நின்றுள் அவன் வெறும் கலா வெறியன்தானே! பெண் பேதைகளை நிர்வாணமாகப் பார்த்துப் பார்த்து மகிழ்வானே தவிர, அவனது உள்ளத்து உணர்ச்சிகள் எழுந்து பேயாட்டம் போடுவதில்லை.

அவளின் நெஞ்சு விம்மித் தணிந்தது. அதை ரசித்தான் அவன். அவளோ 'இன்னும் என்னைப் புரிந்து கொள்ளவில்லையே இவர்... சீசீ... அப்படி இருக்காது; அவருக்கு என் மேல் தணியாத காதல்...இப்படி என்னைத் தொட்டு ...' என உளம் மகிழ்ந்தாள்.

'சரி போய் நாளை வா' ஆணையிட்டான் அவன். சென்றாள், வந்தாள். மீண்டும் வந்தாள். மீண்டும், மீண்டும் வந்தாள். ஓவியம் பூர்த்தியானது உள்ளத்து உணர்ச்சிகளைத் தூரிகையினால் துவைத்து உதடாக அமைத்து அவளைச் சமைத்திருந்தான் அவன். வெற்றி... வெற்றி வெறியாக மாறியது. அவனது ஓவியத்தின் மேல் அவனுக்குக் காதல், வைத்த விழி வாங்காமல் உணர்ச்சிகள் மரத்துச் சிலை போல் வெறிக்க நோக்கிக் கொண்டிருந்த அவளைக் கழுத்தைச் சுற்றி இரு தளிர்க்கரங்கள் இறுகின, திடுக்கிட்டுத் திமிறவில்லை அவன். ஆசை வெறி கண்களில் அலைபாய செம்பவள இதழ் துடித்து மின்ன, அவனை அணைத்தாள் அவள்...

'மாஸ்டர் தபால்'- திடுக்கிட்டு விடுபட்டான். அவனே இலை தான் உடைந்த கண்ணாடி ஜன்னலினூடு அறைக்குள் எறியப்பட்ட கடிதத்தை அவனைக் கேட்காமலே உடைத்தான். அப்படி ஒரு உரிமை அவளுக்கு...

கடிதத்தைப் படிக்கப்படிக்க வேகமாக விம்மித் தணிந்த அவள் மார்பு, கண்கள் படபடக்க பீதியுடன் அவனை நோக்கினள் அவள்... அவன் சிலையாகிவிட்டானே! அவளையும் அறியாமல் பீறிட்ட கண்ணீர்கடிதத்தில் துளி துளியாக எழுத்தை அழித்தது. மோசக்காரர் ஊரிலே ஒன்றை வைத்துக்கொண்டு என் இதயத்தைச் சுக்குநூறாக உடைத்தெறிந்து விட்டாரே! சேச்சே அப்படியிருக்காது, நான்தான் ஏமாந்து விட்டேன்... எல்லாம் எனது சபலந்தான், போகட்டும். அவர் ஏன் வெறிக் வெறிக்கப் பார்த்தார்; இனிக்க இனிக்கப் பேசினர். என் உடலைத் தொட்டு விளையாடினரே! ஏன்?... ஏன் அது எனக்குப் புரியவே இல்லையே... விம்மியவாறு தள்ளாடித் தள்ளாடி அவ்விடத்தை விட்டு அகன்ருள், அவள், இனி அங்கு வருவதேயில்லை என்ற உறுதியுடன். விம்மல் கேட்டு விழித்த அவன் திரும்பித் தேடினன் அவளை. தள்ளாடிய வாறு அவள் தொலைவில் செல்வது தெரிந்தது. அவனருகே கசங்கிக் கிடந்த கடிதத்தை எடுத்துப் பிரித்தான் அழிந்த எழுத்துக்களினூடாக ... அவனது காதலி எழுதிய கடிதமல்லவா அது ..

அன்புள்ள அத்தான் என்று ஆரம்பித்து என்று வருவீர்களோ! ஏங்கி இளைத்து விட்டேன் என்று முடித்திருந்தாள் ...

உதட்டில் புன்சிரிப்பைத் தவழவிட்டான் அவன். அவள் என்றும் அவனுக்கு உயிர்தான் ஆனல் அவனது கலா வெறி [illegible] மண்டைதான் ஒன்றேஒன்றை மட்டும் புரிந்துகொள்ள முடியாமல் [illegible] அச்சிறுமி அவன் மேல் வைத்த தணியாத காதல் தான் அது.

(யாவும் கற்பனை)


புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30 p.m.
The Count of Monte Cristo

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
முத்துராமன் — விஜயா நடித்த
ரோஷக்காரி (புதிய பிரதி)
நாளை முதல் ஜெய்சங்கர் — ஜெயசுதா
பந்தாட்டம் (புதிய பிரதி)

# கோட்டை ரயில் நிலையத்தில் ஒரு சம்பவம்!

சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் திரும்புவதற்காக கொழும்புக்கோட்டை ரயில் நிலையத்தில் நின்றிருந்தேன். ரயில் வருவதற்கு அதிக நேரமிருந்ததால் டிக்கட் ஏதும் எடுக்கவில்லை.

கால்சட்டை மேல்சட்டையுடன் குடிவெறியில் ஒருவர் தள்ளாடியபடி வந்தார் அங்கு நின்ற கடலை விற்கும் பையனுடன் ஏதோ தகராறு செய்துவிட்டு நான்நின்ற இடத்துக்கு வந்தார் என்னை வழியனுப்ப வந்த இளைஞனிடம் போய் "நீர் எங்கிருக்கிறீர்?" என்று சிங்களத்தில் கேட்டார். இதைக் கவனித்த நான் "அவர் என்னுடைய ஆள், என்னுடன் யாழ்ப்பாணம் செல்லவிருக்கிறார்" என்று ஆங்கிலத்தில் கூறினேன்.

உடனே என்பக்கமாகத் திரும்பி, "அப்படியானால் பாஸ்போர்ட் எங்கே?" என்றார் ஆங்கிலத்தில், நான் சிரித்துவிட்டு-

"யாழ்ப்பாணம் போவதற்கு பாஸ்போர்ட் எதற்கு?" எனக் கேட்டேன்.

"அப்படியானால் டிக்கட் வாங்கிவிட்டீரா?" என்று கேட்டார். "டிக்கட் வாங்குவதும் வாங்காததும் என் விஷயம், ரயில் வருவதற்கு இன்னும் நேரம் இருக்கிறது. நேரமாகும்போது நான் டிக்கட் வாங்குவேன் தானே!" என்றேன்.

அந்த ஆசாமி குரலை உயர்த்தி பெரிதாகச் கத்தியபடி "நீர் டிக்கட் வாங்கத்தான் வேண்டும் தெரியுமா?" கூச்சலிட்டார். "எனக்கு நேரமிருக்கிறது டிக்கட் வாங்கும் நேரம் வரும்போது நான் வாங்குவேன்" என்று நானும் சிறிது குரலை உயர்த்திச் சொன்னேன். அதற்குள் அங்கு நின்ற பிரயாணிகளும் வேறுசிலரும் அகல விரித்த கண்களுடன் எங்களை நோக்க ஆரம்பித்தார்கள் இன்னும் சிலர் அங்கு எங்களைச் சுற்றிக்கூடிவிட்டார்கள். அந்த ஆசாமியின் நோக்கம் எனக்குப் புரிந்துவிட்டது.

இப்படியவர்கள் தாம் வெளியூர்களில் இருந்துவரும் அப்பாவிப் பிரயாணிகளை ஏமாற்றிக் காலம் கழிப்பவர்கள்.

நான் சுற்றுமுற்றும் பார்த்தேன் எனக்கு அந்த நேரத்தில் அறிமுகமானவர்கள் எவரும் கண்களில் தென்படவில்லை.

சற்று தூரத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் எங்கள் பக்கமாக தலையை நீட்டிப்பார்த்துவிட்டுத் திரும்பிக்கொண்டார்.

நான் கால்சட்டை ஆசாமியிடம். "கொஞ்சம்பொறுத்துக் கொள்ளும்" என்று கூறிவிட்டு பொலிஸ் அதிகாரியிடம் சென்று விஷயத்தைச் சொன்னேன். அவர் அக்கறை காட்டிக்கொள்ளாமல் தட்டிக்கழிப்பதுபோல் தெரிந்தது

"நான் யாழ்ப்பாணம் போகும் பிரயாணி, அறிமுகமில்லாத ஒருவன் வந்து தகராறு செய்கிறான், தயவு செய்து வந்து இதைத்தீர்த்துவையும்" என்று வற்புறுத்தவே பொலிஸ் அதிகாரி என்னுடன் வந்தார்.

தகராறு செய்தவனுக்கு இது அதிர்ச்சியாக இருந்தாலும் அவன் பொலிஸ் அதிகாரி முன்னிலையிலேயே என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டு அருகில் வந்தான். "இவரை உங்குத் தெரியுமா?" என்று கேட்டார் பொலிஸ் அதிகாரி.

"எனக்கு யார் என்றே தெரியாது இது என்ன வேடிக்கை" என்றேன். அவன் தன் பாக்கட்டில் கைவைத்து என்னை யார் என்று உமக்குத் தெரியும்தானே. என்று கூறியபடி எதையோ எடுத்தான்.

ஏதோ துப்பறியும் அதிகாரி போல் நடிக்க முயற்சிக்கிறான் என்று நினைத்தேன்.

பொலிஸ் அதிகாரி அவனைப் பிடித்துத்தள்ளி "போ போ" என்று கலைத்தார் அதே சமயம் "பார்சல் கவனம்" என்று சிலர் சொன்னார்கள். அங்கு கூடிநின்ற அனைவரையுமே பொலிஸ் அதிகாரி கலைத்துவிட்டார்.

அதற்கு மேலும் அந்த இடத்தில் இருப்பது புத்திசாலித்தனமில்லையென்று நான் டிக்கட் வாங்கிக்கொண்டு ரயில் நிலையத்துக்குள் வந்துவிட்டேன்.

பொதுமக்கள் நடமாடும் இடங்களில் இப்படித்தான் காடையர்கள் காலங் கழிக்கிறார்கள். இவர்களை அந்த அந்த இடங்களிலேயே பிடித்து அடக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பொது இடங்களில் சுதந்திரமாக மக்கள் நடமாடமுடியாவிட்டால் காவல்துறைதான் எதற்கு? அன்று கோட்டை ரயில் நிலையத்தில் என்னுடன் தகராறு பண்ணிய ஆசாமியைப் பொலிஸ் அதிகாரி கைதுசெய்திருக்கவேண்டும் அல்லவா!

'வேணு'

## தேவை

யாழ்ப்பாணத்தில் மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையமொன்றிற்கு 40 வயதுக்கு மேற்பட்ட ஆங்கில அறிவுள்ள கணக்காளர் ஒருவர் தேவை. விண்ணப்பிக்கவும். மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 7951

## விற்பனைக்கு

கழிவு இரும்பு ஏல விற்பனைக்கு. 22-12-77 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு காரியாலயத்தில் விற்கப்படும் வாங்க விரும்புவோர். கணக்காளர், சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம், காரைநகர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்க.

இப்பொருட்களை பார்வையிட விரும்புவோர், திங்கள், செவ்வாய், புதன் காலை 9-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை பார்வையிடலாம்

கணக்காளர்
சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
காரைநகர்.

தொலைபேசி: 804.

7953

# உள்ளூராட்சி தேர்தல்களை விரைவில் நடத்துக!

## பேரவையில் யாழ். எம். பி.

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களை மிக விரைவில் நடத்தும்படி நேற்றுக்காலை தேசிய அரசுப் பேரவையில் யாழ்ப்பாணம் எம். பி திரு வெ யோகேஸ்வரன் வற்புறுத்தினார்

உள்ளூராட்சி ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடும் படியும் அவர் வலியுறுத்தினார்

உள்ளூராட்சி அமைச்சின் செலவினங்களின் மீதான குழுநிலை விவாதத்தின்போது அவர் பேசினார்.

1977-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மாநகரசபை ரத்துச்செய்யப்பட்டதென்றும் அதன் பின்னர் இச்சபையில் நியமனம் கோரி விண்ணப்பித்திருக்கிறார்கள் என்றும், இச்சபையை விரைவில் நியமிக்கவேண்டும் என்றும் அவர் கோரினார்

யாழ்ப்பாணத்திலுள்ள கட்டடப் பொருள் கூட்டுத்தாபனக் கிளையில் பொருட்கள் இடைப்பதில்லை என்றும் முக்கியமான பொருட்களைப் பெற கொழும்புக்கு மக்கள் வரவேண்டிய நிலை இருப்பதாகவும் திரு. யோகேஸ்வரன் கூறினார். [ப]

# தமிழிலும் வாக்காளர் பட்டியல்

[கொழும்பு]

உள்ளூராட்சி மன்ற வாக்காளர் பட்டியல் தமிழிலும் வெளியிடப்படும் என்று உள்ளூராட்சி மன்ற அமைச்சர் திரு ஆர் பிரேமதாசா நேற்று தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் ஏற்படும் தாமதத்தினாலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களும் தாமதமாகின்றது என்றும் திரு. பிரேமதாசா கூறினார்.

யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே திரு பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

## அன்பான...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

10-00 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறும் மாவட்ட விவசாய இணைப்புக் கூட்டத்தில உரையாற்றுவார்

1-30 மணிக்கு வேலணை விற்பனைத் திணைக்கள மக்களடைவைத திறந்துவைப்பதற்கு வேலணை செல்வார் பின்னர் அங்கிருந்து நயினாதீவுக்குச் செல்வார்.

19 ம் திகதி காலை 7-45 மணிக்கு காரைநகர் சீ-நோர் அபிவிருத்தித்திட்டத்தைப் பார்வையிட்டபின் காலை 9 மணிக்கு யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபன புதிய கட்டிடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

பகல் உணவின் பின் யாழ் அரசமாளிகைக்குத் திரும்பி மாலை 8 மணிக்கு பலாலி சென்று அங்கிருந்து கொழும்பு திரும்புவார்.

## நூலகம்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

யில் நிர்வகிக்கப்படுகின்றன. பாடசாலை நூலகப்பொறுப்பாளர்கள் பல பாடசாலைகளில் இல்லை. அதனால் நூலகத்தை மாணவர்கள் செவ்வனே பயன்படுத்த முடிவதில்லை. எனினும் ஆசிரிய நூலகர்கள் இயன்ற அளவுக்குச் சேவையாற்றி வருகின்றார்கள்

நூல்களை அலுமாரிகளில் பூட்டி வைத்து வடிவு பார்க்கும் மனப்பான்மை மாற வேண்டும் நூல்கள் வாசிப்பதற்குரியன அவற்றை மாணவர்கள் பயன்படுத்தச் செய்வது அதிபரினதும் ஆசிரியர்களினதும் கடமையும்,

வசதிப்பணத்திலிருந்து நூலகத்துக்கு நூல் வாங்குவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்குகின்றது. இந்தப் பணத்தைக் கொண்டே ஆண்டு தோறும் தரும் நூல்களை வாங்கி ஒரு நூலகத்தை உருவாக்கி வளர்ப்பதற்கான வாய்ப்பு எல்லா மகா வித்தியாலயங்களுக்கும் மத்தியமகா வித்தியாலயங்களுக்கும் இருந்துவருகின்றது இந்த வாய்ப்பைப் பல பாடசாலைகள் பயன்படுத்தாமல் இருப்பது வருந்தத்தக்கது

இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் வாசிப்புப் பழக்கம் சிறப்பான அளவுக்கு வளர்ந்துள்ளது என்பது பிரிட்டிஷ் கவுன்சில் நூலகர் இரசெல் பெண்டன் என்பவரின் கருத்து எனினும் யாழ்ப்பாண மாவட்டத்திலே பாடசாலை நூலகங்கள் எதிர்பார்க்கப்படும் அளவுக்கு இயங்கிவருவதில்லை என்பதவும் குறிப்பிடவேண்டிய தொன்றாகும்

கல்வியமைச்சு நூல்களை வாங்குவதற்கும் ஆசிரியர்கள் நூலகப் பொறுப்பாளராகக் கடமையாற்றுவதற்கும் வசதிகளைச் செய்துதருகின்றது அலுமாரிகள் கூட வழங்கப்படுகின்றன. நூலகம் ஒன்றைச் சிறிய அளவிலேனும் ஆரம்பிப்பதற்கு இவ்வசதிகள் போதுமானவை. இவற்றைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு நூலகச் சேவையைச்செய்தல் பாடசாலை அதிபரினதும் ஆசிரியர்களினதும் தலையாய பணியாகும்.

# வவனியாவில் லொறியை தடுத்து நிறுத்திக் கொள்ளை

[வவுனியா]

யாழ்-கண்டி வீதியில் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றில் நால்வர் அடங்கிய கோஷ்டி ஒன்று துப்பாக்கி, வாள் மூலமாக கொள்ளையடித்தது.

மூன்றுமுறிப்பு என்ற இடத்தில் இக்கொள்ளை நடைபெற்றது

11 000 ரூபா ரொக்கப்பணமும், 780 ரூபா பெறுமதிமிக்க வெற்றுச்சாக்குகளும் மேற்படி கோஷ்டியால் லொறியில் இருந்து கொள்ளையடிக்கப்பட்டன.

இதுபற்றிய விசாரணையில் ஈடுபட்ட வவுனியா பொலிசார் சந்தேகநபர்களில் இருவரைக் கைதுசெய்ததுடன் 1497 ரூபா பணத்தையும் கொள்ளையடிக்கப்பட்ட சாக்குகளையும் மீட்டுள்ளனர்.

## அனுரா...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

யாது. கடந்த சில நாட்களாக இவ்வாறான நிகழ்ச்சிகளே நடந்துவருகிறது. புனிதமான இந்தச்சபையில் இனிமேல் இது போன்று பேச அனுமதிக்க மாட்டேன். இவ்வாறு பேச விரும்பினால் சபையின் நிரந்தர விதிகளின்படி தனியான பிரேரணை ஒன்றைக்கொண்டுவந்தே பேசவேண்டும். இன்று காலையில்கூட இதுபற்றி நான் உம்மிடம் நேரில் கூறினேன். அப்போது எனது கூற்றை ஏற்றுக்கொண்ட நீர் இப்போது குறுக்குவழியில் செல்கிறீர்.

அப்போது திரு. மைத்திரிபால சேனநாயக்கா தமக்கு சபாநாயகரின் மனதைப் புண்படுத்தும் நோக்கம் இடையாது என்றுகூறினார்

### நான் பௌசி அல்ல

அப்போது சபாநாயகர், "இப் பேரவை கொழும்பு மாநகரசபையும் அல்ல நான் பௌசியும் அல்ல. இப்பேரவையின் கௌரவமே எனது கௌரவம். இக்கௌரவத்தை எப்படியும் காப்பாற்றுவேன்" என்று கூறினார். [ஈ-இ]

## எதிர்ப்பு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இனத்தை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் அரசின் பிரதிநிதியாக யாழ்ப்பாணம் வரும் அமைச்சரின் வைபவங்களில்பொதுமக்களும் இளைஞர்களும் கலந்துகொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

# ஆண்டு நிறைவு விழா

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிச் செயல் திட்ட மாணவர்களின் இளைஞர் படைக் குழுமக்கள் பாலர் கழக ஆண்டு நிறைவு விழாவு தருநாட்டல் விழாவும் இன்று மாலை பாலர் கழக நிலையத்தில் நடைபெறும்.

மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மில்க்வைற் சவர்க்காரத் தொழில் அதிபர் திரு. க. கனகராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மகாஜனக் கல்லூரி செயல் திட்ட மாணவர்கள், இந்து இளைஞர் சனசமூகநிலையத்தினர், காந்தி கல்வி நிலையத்தினர் ஆகியோரின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவில் திருமதி நா. கனகராஜா பரிசில்களை வழங்குவார். [இ]

# இந்தியா-402 ஆஸி—4-171

சிட்னி டிச. 17

இந்திய-ஆஸ்திரேலிய 2-வது கிரிக்கட் டெஸ்டின் 2-வது நாளான இன்று ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கட் நஷ்டத்திற்கு 71 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 402 ஓட்டங்களைப் பெற்றது.

# மரண அறிவித்தல்

## நா. சாம்பசிவம்

பிரபல வர்த்தகரும், சாம்பசிவம் அன் கம்பனி உரிமையாளருமான நாகலிங்கம் சாம்பசிவம் காலமாகிவிட்டார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், Dr சண்முகலிங்கம் (அரசினர் வைத்தியசாலை யாழ்ப்பாணம்), கணேசலிங்கம், நடேசன், சிவகாமி மகேஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் அருமைத்தந்தையும் சிவசுப்பிரமணியம் (அதிபர் கூட்டுறவுக்கல்லூரி, நளாயினி (ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி), தேவரோகிணி ஆகியோரின் அருமை மாமனுமாவார். ஈமக்கிரியை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெறும். 7955

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.